Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 20ஞாயிற்றுக்கிழமை [04-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 188

## கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, ஜூலை 4

விடுதலைப் புலிகளினால் நாளை அனுஷ்டிக்கப் படவுள்ள கரும் புலிகள் தினத்தையொட்டி கொழும்பு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கென நேற்றுமுதல் விசேட திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்த பாதுகாப்புத் திட்டத்தின்படி கொழும்பு நகருக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் தீவிர பரிசோதனைக்குள்ளாக்கப்படுவதுடன் சந்தேகத்திற்கிடமான வீடுகளும் சோதனையிடப்படும் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

கரும்புலிகள் தினத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களில் ஈடுபடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதே சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் நாளை கரும் புலிகள் தினம் விடுதலைப் புலிகளினால் அனுஷ்டிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1987 ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கிய இராணுவ முகாம் மீது வெடிகுண்டு நிரப்பிய வாகனத்தில் சென்று தாக்குதல் நடத்திய முதலாவது கரும்புலி மில்லர் நினைவாக வருடாவருடம் விடுதலைப் புலிகளினால் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

## ஊர்காவலர்கள் மூவர் பலியாகினர்

### எல்லைக்கிராமத்தில் தாக்கு

மட்டக்களப்பு, ஜூலை 4

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட எல்லையில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் மூன்று ஊர்காவல் படை வீரர்கள் பலியானார்கள்.

மகா ஓயா — வொரவெவ கிராமத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள மற்றுமொரு ஊர்காவல் படை வீரர் பதியத்தலாவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. [இ-21]

# 90 ஆயிரம் குடும்பங்களுக்கான நிவாரணத்தை நிறுத்த அரசு முடிவு!

## சமுர்த்தி திட்டத்தின் கீழ் மிக குறைந்த அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். குடாநாட்டில் சுமார் 90 ஆயிரம் குடும்பங்களுக்கு இடம் பெயர்ந்தோர் குடும்பங்கள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் நிவாரணததை நிறுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை நிறுத்திவிட்டு படிப்படியாக சமுர்த்தித் திட்டத்தின் கீழ் நிவாரணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி யாழ். செயலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று யாழ். செயலகத்துக்கு நேற்று முன்தினம் கிடைத்துள்ளதாக நம்பிக்கையாக அறியவருகிறது.

தற்சமயம் குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் நிவாரணமாக குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆகக்கூடியது ஆயிரத்து 250 ரூபா வரை பெறுமதியான பொருள்கள் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உலர் உணவுப் பொருள் நிவாரணத்துக்குப் பதிலாக சமுர்த்தி நிவாரணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டால் இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் 250 ரூபா வரையே மாதாந்தம் பெற முடியும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தொழில் மற்றும் வருமான

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வேப்பங்குளம் சம்பவம்:

## ரெலோ உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியுடன் கைது

வவுனியா, ஜூலை 4

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை புளொட் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஒருவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னிக்கான போக்குவரத்துப் பாதை:

## வவுனியா அரச அதிபர் மாங்குளம் சென்று நிலைமையை ஆராய்ந்தார்

வவுனியா, ஜூலை 4

மாங்குளம் ஊடாக வன்னிக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டு வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையிலான குழுஒன்று நேற்று மாங்குளம் பகுதிக்கு விஜயம் செய்தது.

வவுனியா அரச அதிபருடன் மேலதிக அரச அதிபர் ரகுநாதபிள்ளை, பொறியியலாளர் என். சிறிஸ்கந்தராசா மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வடக்கின்ர வயிற்றில அடிக்கிற விசயம் என்றால் முன்னுக்கு நிப்பினம் போல...!

## போக்குவரத்து தொடர்ந்து நிறுத்தம்

வவுனியா, ஜூலை 4

கடந்த 25 ஆம் திகதிமுதல் வன்னியிலிருந்து மன்னார் ஊடான போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது

இதனால் வன்னிப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாதிருப்பதால் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா செல்ல வேண்டிய நோயாளர்கள் பெரும் துன்பங்களை எதிர்

[14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு நகரில் பார்சல் குண்டு

மட்டக்களப்பு, ஜூலை 4

மட்டக்களப்பு முனை வீதியில் பார்சல் குண்டு ஒன்று நேற்று முன்தினம்இரவு படையினரால் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு நகரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள தொலைபேசிக் கபினெட்டுக்கு மேலே இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

குண்டு வைக்கப்பட்டிருந்ததை அறிந்த படையினர் நேற்றிரவு 8 மணியளவில் மேற்படி குண்டை வெடிக்க வைத்தனர்.

இந்தக் குண்டு வெடித்திருந்தால் இராணுவத்தினர் மற்றும் அரச அலுவலகங்களின் தொலைபேசி இணைப்புகள் உட்பட 300 தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருக்கும் என்றும் மட்டக்களப்பு ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

### பள்ளமடு மோதலில்

## உயிரிழந்த 25 பேரின் விவரம் புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

பள்ளமடுப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலின்போது தமது தரப்பில் உயிரிழந்த 25 புலிகளின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

புரட்சிக்காவலன் [பாலசுப்பிரமணியம் ராஜ்கபூர்— யாழ்ப்பாணம்], பைந்தமிழினி [நாகலிங்கம் மகாதேவி — உடையார்கட்டு சுதந்திரபுரம்], புரட்சிநரியன் [சின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி - மாவட்ட

# மாணவர் ஒன்றியம்

## யாழ். பல்கலைக்கழகம்

எமது ஒன்றிய அறக்கொடை நிதியத்துக்கான

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

இறுதித்திகதி 04-07-99இல் இருந்து 11-07-99 ஆக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: ஒன்றிய உறுப்பினர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் 05-07-99 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும். அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்கின்றோம்.

நன்றி (67174)

உ

பொய்யாமொழி ஜோதிடம்

## அதிர்ஷ்டம் அழைக்கிறது

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

புதன்கிழமையில் 111/3, கோவில் வீதி, நல்லூரிலும் ஞாயிறு முழுநாளும் ஏனைய நாள்களில் பிற்பகல் 4 மணிக்குப் பின்பு மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.

சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்

(67170)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் உப தலைவர்

திரு. சிவசத்தியபாலன்

அவர்களது மகள்

### செல்வி ஜீத் சிவசத்தியபாலன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ்ப் பொதுப்பணி மன்ற சனசமூக நிலையம்,
ஏழாலை தெற்கு.

(67158)

## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

'இணுவைக் கந்தன் கழலடிகளைப் போற்றி'



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 6 | 02 |
| 0 | 06 |
| 1908 | 1999 |

### அமரர் ஏரம்பு சின்னத்துரை

(இணுவில் மேற்கு, இணுவில்)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை: 4 - 7 - 99
ஞாயிற்றுக்கிழமை

தகைமையுடன் தரணியிலே நாம் வாழ தளராது பாடுபட்டு, தன்மான உணர்வூட்டி தர்ம சிந்தையுடன் வாழ வழிகாட்டிய எம் அன்புத் தந்தையே! தங்கள் அமுதமொழி கேளாது தவிக்கின்றோம். தங்கள் நினைவுடனும் ஆசியுடனும் நம் கடமைகளைத் தொடர்வோம்.

எமது தந்தையின் 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் ஆத்ம சாந்தி நிகழ்வும் எமது இல்லத்தில் இன்று (4 - 7 - 99) ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும். இவ் வைபவத்தில் தங்கள் யாவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், பூட்டன்,

'துரபலர்ப் பொய்கை'
இணுவில் மேற்கு,
இணுவில்.

எமது வீடியோ CD
பிரதிகள் வெளியீடு!

★ ரைகர்
② ரவுடி வம்சம்
★ தேவதாசி
② கமிஷனர் பவானி
★ நெஞ்சினிலே
② வாலி

CD விற்பனைக்கு உண்டு

## ஆர்க் வீடியோ லைபிறறி

51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

### அல்டி

யாழ்ப்பாணம்.

(67172)

இன்று ஆரம்பம்!

பொருளியல்

A/L 2001

சந்தைப் பொருளாதாரம்

Sat., Sun. 10 - 11

by: திரு. விக்கி

### விக்னா கல்வி நிறுவனம்

(67168)

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

சரத்குமார் ,தேவயானி நடித்த

### ஒருவன்

காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070- 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 - 212223

(66667)

### நாகம்ஸ்

சுன்னாகம்

கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த

### ஜீன்ஸ்

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]

[67132]

### ராஜா

யாழ்ப்பாணம்
8ஆம் திகதி வரை
விஜய், தேவயானி,
ரம்பா. மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த

### நினைத்தேன் வந்தாய்

10.30, 2.00, 5.00

# சிறுவர் விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, ஜுலை 4
மேலைப்புலோலி ஆத்தியடி சிறுவர் கல்விப் பூங்கா விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆத்தியடி சனசமூகநிலையத் தலைவர் சோ. கனகசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் உதவித்திட்டப் பணிப்பாளர் ந. மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர் சங்க ஆலோசகர் த. என். எஸ். திருச்செல்வம், பருத்தித்துறை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பொ. பரமேஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(ஐ-173)

★ ★ ★

வடமராட்சி, ஜுலை 4
அல்வாய் பாரதிதாசன் பாலர்பாடசாலை விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் பெ. கனகசபாபதியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. சுப்பிரமணியம், இளைப்பாறிய ஆசிரியர் ஜே. எஸ் நல்லதம்பி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

[ஐ-173]

## சுனில் ஆட்ஸ்

16 - 06 - 99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச் சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

தரமான கலர்ப் படங்களுக்கு நாடுங்கள்.

## சுனில் ஆட்ஸ்

272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8077)

### பரிசுத்த செபமாலை அன்னை ஆலயம்

கொழும்புத்துறை

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி ஆலய திருத்தவேலை நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 02 - 07 - 1999 (வெள்ளி) அன்று ஆலய முன்றலில் பங்குத்தந்தையினாலும் முதல் நன்மை சிறார்களினாலும் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

- 1 ஆம் பரிசு: 1238
- 2 ஆம் பரிசு: 796
- 3 ஆம் பரிசு: A–013

ஆறுதல் பரிசில்கள்

324, 751, 1856, 557, 2178,
1768, 493, 2174, 1255, 2946.

– பங்குத்தந்தை
மேய்ப்புப் பணிச்சபை.

(67157)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 07 | 04 |
| 04 | 06 |
| 1929 | 1999 |

### திருமதி அன்னபூரணம் வேலுப்பிள்ளை

ஒரு திங்கள் ஆனாலும் ஓயவில்லை எம் கவலை
உருகிறதே உள்ளம் உம் பிரிவைத் தானெண்ணி
விரைவினிலே நீரெம்மை விட்டகன்று சென்றதனால்
பெருந்துயரங் கொண்டே வாடுகின்றோம் ஒன்றாய்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

20, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(67171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் எண்ணிக்கையிலான மக்களை இடம்பெயர வைத்த போர்க்கோஷம்

**வவுனியா வலம்**
-ரா. இளவரசன்-

'ரணகோஷ' தாக்குதல் 1, 2, 3, 4 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு தற்போது 4-வது கட்டம்பகுதி-1, பகுதி2என்றும்மேற்கொள்ளப்பட்டு அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

மன்னார் – பூநகரி ஊடாக யாழ். பாதையைப் பிடிப்பது தான் இந்தத் தாக்குதலின் நோக்கமெனக் கொள்ளப்பட்டாலும், தற்போது இது வடக்கு நோக்கி அல்லமேற்கு நோக்கியே மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி பாப்பா மோட்டையிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பள்ளமடுவை அடைந்து அங்கிருந்து விடத்தல் தீவைக் கைப்பற்றுவதுதான் திட்டமாக இருக்கிறது. இவ்வாறு ரணகோஷங்கள் மூலம் விடத்தல் தீவு வரை கைப்பற்றிவிட்டால் விடத்தல்தீவு முதல் நாயாறு, பெரியமடு, மூன்று முறிப்பு, ஊடாக ஜெயசிக்குறு படையினருடன் கண்டி வீதியை இணைத்து ஒரு நேர்கோடாக எவ். டி. எல் எனப்படும் முன்னரங்க நிலைகளை அமைத்துக் காவல் காப்பது இலகுவாக இருக்கும். படையினர் தேவை குறைவடையும்.

பின்னர் விடத்தல்தீவு, பள்ளமடு, மூன்று முறிப்பு ஆகிய பகுதிகளிலிருந்து- புதிய பெயருடனான இராணுவ நடவடிக்கையைத்

## மேலும் தொடருமா?

திட்டமிட்டு யாழ்ப்பாணத்திற்கான பாதையைத் திறக்க பூநகரியை நோக்கி முன்னேறலாம் என்ற திட்டத்திலேயே தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் வெகு முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த எதிர்பார்ப்புடன் பாப்பா மோட்டைப் பகுதியிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் எந்த நகரப்பகுதியையும் கைப்பற்ற முடியாமல் பாப்பா மோட்டைக்கு 2–3 கிலோ மீற்றர் வரை நெடுவரம்பு என்ற இடம்வரை— முன்னேறி அடர்ந்த காட்டுப் பகுதியில் நிலைகொண்டிருக்கின்றனர். நகரப் பகுதிகள் எதனையும் பிடிக்காது இடையிலே காட்டிலே தரித்து நிற்பதால் அதனை வெற்றியாகக் காட்டமுடியாது என்பதால் தானோ என்னவோ 'ரணகோஷ—5' என்று பெயரிடப்படாமல் 'ரணகோஷ—4' நடவடிக்கையின் இரண்டாம் பகுதியென தற்போதைய நடவடிக்கைக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ரணகோஷங்களில் புலிகள் எந்த வித எதிர்ப்பையும் காட்டவில்லை. அதனால் இராணுவத்தினரின் முன்னேற்றமும் இடைஞ்சலின்றி இருந்தது. ஆனால் பாப்பா மோட்டைப் பகுதியைத் தாண்டி முன்னேற புலிகள் படையினரை அனுமதிக்கவில்லை. தமது வேலையைக் காட்டத் தொடங்கி விட்டனர். படு பயங்கரமாக புலிகளின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவந்தது. பீரங்கிகள், டாங்கிகள், ஆட்டிலறிகள் சகிதம் முன்னேறிய படையினரை அதே பீரங்கிகள், ஆட்டிலறிகள்சகிதம் சந்தித்தனர் புலிகள். இந்த நடவடிக்கையானது கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை தான் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும் அதற்கு முன்தினமே பகல் வேளையில் இராணுவத்தினர் முன்னேறிக் காடுகளில் பதுங்கியிருந்தனர்.

அப்போது அந்தப் பாதையால் வன்னியை நோக்கிப் பயணம் செய்த சில வியாபாரிகளையும் பயணிகளையும் படையினர் பிடித்துத் தடுத்து வைத்துவிட்டனர். வன்னிக்குப் போனால் அவர்கள் புலிகளிடம்சென்று தமது முன்னேற்றம் பற்றி தகவல் தெரிவித்துவிடுவார்கள் எனக் கருதி அவர்களைத் தொடர்ந்து பயணம்செய்ய விடாது தடுத்து வைத்திருந்தனர். மறுநாள் மன்னார் செயலக அதிகாரிகளிடம் அவர்கள் கையளிக்கப்பட்டு தற்போது அவர்கள் மன்னார் வை.எம்.சி.ஏ கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் முன்னேற்ற முயற்சி தடுக்கப்பட்டு புலிகள் மும்முரமாகத் தாக்கத் தொடங்கிய பின் தமது தரப்பு இழப்புகளை மறைக்க வெவ்வேறு செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது படைத் தரப்பு.

தமக்குச் சேதமில்லை; குறைவு என்றும் ஆனால் புலிகள் தரப்பில் பலத்த சேதமென்றும் சொல்லப்பட்டது. ஆயினும் வவுனியா நகரப் பகுதிக்கு மேலாகப் பறந்த ஹெலிகளின் பரபரப்புகளைக் கண்டு ''எங்கேயோ பலத்த அடி விழுந்திட்டுது போல'' என்று சாதாரண ஈனவர்களே கதைக்கக்கூடியளவிற்கு அன்றைய நிலைமை காணப்பட்டது.

அத்துடன் மறுநாள் அவசர அவசரமாகபறையனாலங்குளம் பகுதிக்கு வவுனியாவிலுள்ள செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே புலிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களென ஒரு பெரிய 'லிஸ்ட்' செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதில் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் டாங்கிகளை எதிர்க்கும் ஆயுதங்கள், சிறுரக ஆயுதங்கள் என்பனவும், பல சடலங்களும் கைப்பற்றப் பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆயினும் அங்கே சில சிறுரக துப்பாக்கிகள் மட்டுமே செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டது. ஏனைய பெரிய ரக ஆயுதங்களோ, சடலங்களோ காண்பிக்கப்படவில்லை.

அதன் பின்னர் 36 சடலங்கள் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. ஆயினும் அவை தங்களுடையவை அல்ல என்று கூறிப் புலிகள் கையேற்க மறுத்து விட்டனர். அவையனைத்தும் அப்பாவி மக்களின் சடலங்களென ரெலோ இயக்கப் பிரமுகர் ஸ்ரீகாந்தா அறிவித்துள்ளார். வேறெந்தத் தாக்குதல்களுக்கும் இல்லாத சிறப்பம்சம்

(13ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்துப் புத்திலக்கிய வரலாற்றில் நிறுவனத் தூணாக விளங்கும் வரதர்

''மூன்று விஷப்பாம்புகள் அவளைக் கடித்து உறிஞ்சின. அவள் உடலும் உள்ளமும் வேதனையால் துடித்தன; எரிந்து போகிற உடலை யாரோ என்னவோ செய்தார்கள். மனம் சிறிதும் சம்பந்தப்படாதபோது அவளுடைய மானம் போய் விடுமா? செய்யாத குற்றத்துக்கு



அவள் தண்டனை அடைய வேண்டுமா? மனம் சம்பந்தப்படாத போது வெறும் உடலுக்கு நேர்ந்த தீங்கினால் மானம் அழிந்துவிடுமென்றால் பிரசவத்துக்காக டாக்டரிடம் போகும் பெண்களெல்லாம்......'' —

''பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறுசெய்யப்பட்டால் அவள் மானம் அழிந்துவிடுமா? அதற்காக அவள் உயிரையும் அழித்துவிட வேண்டுமா? அப்படி உயிரை விட்ட அவளைப் பத்தினித் தெய்வமென்று கும்பிட வேண்டுமா? கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறியவள் — அப்படிச் செய்வதே கற்புடை மகளிருக்கு அழகு'' என்ற சமூகக் கருத்தினால் உந்தப்பட்டு ஏற்றப்பட்டவள் பத்தினித் தெய்வமா? அல்லது பகுத்தறிவுள்ள சமுதாயத்துக்கும் பலியான பேதையா? —

இவ்வாறு ''கற்பு'' என்ற கதையில் வரும் பிரதான பாத்திரத்தின் மூலம் எமது சமூகத்தில் பெண்கள் நிலை பற்றிப் புரையோடிப்போன மூடக்கருத்துக்களை உடைக்க வேண்டுமெனப் பொங்கிக்குரலெழுப்பிய சமூக சீர்திருத்த முன்னோடிச் சிந்தனையாளராக இன்று பவளவிழாக் காணும் மூத்த எழுத்தாளர் வரதர் அவர்கள் விளங்குகின்றார்.

பெண்ணியம் சார்ந்த புதுமையான கருத்துக்கள் இன்று உலகின் நாலா பக்கங்களிலும் அலசப்படுகின்றது. ஆனால் பல தசாப்தங்களுக்கு முன்னரே பெண்கள் சமத்துவமாக நோக்கப்பட வேண்டியவர்கள் என்பதை வலியுறுத்தி எழுதியதுடன் சமூக மாற்றத்தையும் பெரிதும் விரும்பி வரவேற்ற வரதர் அவர்களின் துணிச்சல் மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

சிறுகதை, நாவல், ஓவியம், வெளியீட்டுத்துறை, பத்திரிகைத்துறை எனப் பல் துறைகளிலும் வரதர் தமது ஆற்றலை வெளிக்காட்டிய போதிலும் அவர் மேம்பட்டு உயர்ந்து நிற்பது சிறுகதைத் துறையிலேயே என இலக்கிய விமர்சகர்கள் தயங்காது குறிப்பிடுவர்.

தமிழகத்தில் படைப்பிலக்கியத்தின் உன்னத காலமெனக் கொண்டாடப்படும் மணிக்கொடி காலம்போல இலங்கையில் மறுமலர்ச்சிச் சஞ்சிகைக் காலம் கருதப்படுகின்றது. 1942 இல் ஆரம்பிக்கப்பட்ட அச் சஞ்சிகையின் அச்சாணியாக விளங்கியவர் வரதர் அவர்களே. இச் சஞ்சிகை இலங்கையில் நவீன இலக்கியத் துறையில் புனைகதை, கவிதை முதலியவற்றின் வளர்ச்சியில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. சமூகப் பிரக்ஞையும் தேசியத் தன்மையும் கொண்ட ஈழத்து இலக்கியம் அடுத்து வந்த தசாப்தங்களில் செழிப்புற்றோங்கி வளர்வதற்கு முன்னோடிப் பணியாற்றிய முக்கியமானவர்களுள் ஒருவராக வரதர் விளங்கினார். பவளவிழாக்காணும் வரதர் இன்றும் நவமான, புதுமையான சிந்தனைகளை வரவேற்று ஆதரவு நல்கிவருவது புதிய தலைமுறையினருக்கும் புளகாங்கிதம் தருவதாகும்.


### அடக்கமானவர்

வரதர் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களுள் முக்கியமான ஒருவர். அவர் ஈழத்துப் புத்திலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்கிய ஸ்தாபகத் தூண்களில் ஒருவர். மேலும் நூற்றுக்கணக்கான தமிழிலக்கிய நூல்களையும், கல்வி நூல்களையும் சிறந்த முறையில் வெளியிட்ட முக்கிய பிரசுரகர்த்தராகவும் அவர் போற்றப்படுகின்றார்.

**பத்மா சோமகாந்தன்**

மிக அடக்கமும் எளிமையுமான சுபாவம் கொண்ட வரதர் தான் கொண்ட கருத்துக்களில் இருந்து சிறிதும் வழுவாதவர் மிகுந்த துணிச்ச[illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)




## எதிரொலி..

-இடியன்-

- போதைப்பொருள் எதிர்ப்பு விழாவடமராட்சியில் சிறப்பாக நடைபெற்றது.
- ★ இப்போதை(ய) நிலையில் யாழ்ப்பாணம் முழுவதும் இத்தகைய விழாக்கள் அவசியம் நடைபெற வேண்டும்!
- யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் மின்சாரத்தைத் திருடி உபயோகிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது; அதைத் தடுக்க முடியாமல் அதிகாரிகள் திண்டாடுகின்றனர்!
- ★ திருடப்படும் பொருளே திருடர்களைத் தண்டித்தால் தான் திருத்தம் உண்டு!
- கப்பலில் அரிசி வந்தும், யாழ்ப்பாணத்தில் அதன்விலை குறையவில்லை!
- ★ கப்பற் செலவு, கப்பச் செலவு — எனக் காரணங்கள் தயாராகவே இருக்கும்!
- நமது நாட்டின் அரசியலில், ஊழல் என்பது பெரிதுபடுத்தப்பட வேண்டிய ஒரு விஷயமல்ல என்கிறார் இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் தலைவர் ஒருவர்!
- ★ ஊழல் என்பது பொதுவுடைமையாக்கப்பட்டு விட்டது என்கின்றாரோ?
- தேர்தலில் யாருடன் கூட்டுச் சேர்வது என்பதைப் பற்றித் த. மா. கா. தலைவர் கறுப்பையா மூப்பனார் இன்னமும் ஒரு முடிவையும் எடுக்கவில்லை.
- ★ தமிழ் மாநில காங்கிரஸ் இப்போது தடு மாறும் காங்கிரஸ் ஆகிவிட்டது!
- இன விகிதாசார முறையை ஒழிப்பது சம்பந்தமாகச் சிறுபான்மை இனத் தலைவர்களிடையிலேயே ஒத்த கருத்து இல்லையாம்!
- ★ பொறுப்பான பதவிகளில் இருப்போரின் 'மன விகிதாசாரம்' சரியானதாக இருந்தால், இன விகிதாசார முறையை ஒழிப்பதைப்பற்றியோ, தொடர்ந்து கடைப்பிடிப்பதைப் பற்றியோ யாருமே கவலைப்பட மாட்டார்கள்!
- பிரபா அனுமதித்தால், இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியிலும் 'இடம்பெயர் சேவை'யைத் தான் செய்யத் தயாராக இருப்பதாக வட— கிழக்கு ஆளுநர் தெரிவித்துள்ளாராம்!
- ★ இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, வன்னி மக்களே 'இடம்பெயர்சேவை'யில் தானே ஈடுபட்டிருக்கிறார்கள்! ஆளுநர் மனம் வைத்தால் அவர் இருக்கின்ற இடத்தில் இருந்துகொண்டே அந்த மக்களின் இடரைத் தீர்க்கலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். புனித மரியாள் வித்தி

# உயர்திரு. சிங்கராயர் தார்

# சேவைநலன் பாராட்டு - மணி

## மேலதிக அரச அதிபர் ஆசி

நாற்பதாண்டுகள் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு ஓய்வுபெறும் சென். மேரிஸ் வித்தியாலய அதிபர் திரு. சி. தார்சீசியஸ் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்.

தான் கற்ற கல்வியை, மற்றவர்களுக்குப் போதிக்கும் பொழுது இரண்டு இலக்குகள் கிடைக்கின்றன. ஒன்று போதிப்பைப் பெறும் மாணவன் அறிவைப் பெறுகிறான். மற்றையது,போதிப்பவன் தன் அறிவை மேலும் அபிவிருத்தி செய்து கொள்கிறான். எண்ணற்ற மாணவ, மாணவிகளை உருவாக்கி அவர்களிடையே கல்வியோடு சேர்ந்த ஒழுக்கத்தையும் கற்பித்து நல்லதொரு மாணவ சமுதாயத்தைப் படைத்துள்ளார் திரு. தார்சீசியஸ் அவர்கள்.

அவர் நாடகத்துறையிலும் ஈடுபட்டு, பல நாடகங்களை இயக்கி அரங்கேற்றியுள்ளார். சென். மேரிஸ் வித்தியாலயம் இவரது தலைமையின் கீழ் சிறப்பாக இயங்கியது வெள்ளிடை மலையாகும்.

தன் ஓய்வுக்காலத்திலும், சமுதாயத்துக்குப் பயன்படும்படி சேவை செய்ய ஆண்டவன் துணை நிற்பாராக. என்றும் எமது வாழ்த்துக்கள்!

து. வைத்திலிங்கம்
மேலதிக அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.

## மணிவிழா நாயகமே!

ஈரெட்டு ஆண்டுகளாய், அறிவொளியை அளித்தவரே, ஈரைந்து ஆண்டுகள் அதிபராய்ப் பணி தொடர்ந்தவரே சீர் மிக்க புனித மரி வித்தியாலயம் தன்னை யாழ். மண்ணில் பேர் பெற்றுத் திகழ வைத்த பெருமகனே; பார் போற்றக் கல்விப்பணிச் சங்கமதை—தமிழ் மண்ணில் சோர்வின்றி வளர்த்தெடுத்த செயல் வீரா! தார்சீசியஸ் எனும் எங்கள் தவப் புதல்வா ஊர்போற்றும் மணிவிழா நாயகமே — எந்நாளும் நீர் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திடுவீர் — வாழியவே!

செயற்குழு உறுப்பினர்
பழைய மாணவர் சங்கம்,

## பதவிக்குப் பெருமை

அன்பர் சி. தார்சீசியஸ் அவர்கள் பதவிக்குப் பெருமைசேர்த்த அதிபர்களில் ஒருவர். நான் யாழ்ப்பாணத்தின் பிரதேச செயலாளராக இருந்த காலத்தில் அன்னாரின் கல்வி நிர்வாகத் திறனைக் கண்டு வியந்திருக்கின்றேன். கலைத் துறையில் அவருக்கிருக்கும் காதலைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்திருக்கின்றேன். புனித மரியாள் வித்தியாலயத்தின் கல்வி, கட்டமைப்புத் தரங்களை உயர்த்துவதில் அவர் முக்கிய பங்காளியாகச் செயற்பட்டுள்ளார். கல்விச் சமூகத்தின் பரிபூரண மதிப்பை அவர் பெற்றுள்ளார் எனவேதான் அவரால் அதிபர் பதவி பெருமை பெற்றதென வற்புறுத்திக் கூறுவதில் கர்வம் கொள்கிறேன். வாழ்த்துக்கள்!

கலாநிதி க. குணராசா.
பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்.

## சிறந்த பண்பாளன், கல்விமான்

சிறந்த சமூக சேவையாளன்,பண்பாளன், கல்விமான், நிர்வாகியாக வாழ்ந்தவர் திரு. சி. தார்சீசியஸ் அவர்கள். தனது அறுபது வயதினைப் பூர்த்தி செய்து கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெறும் அவர்களின் சேவை நலன் பாராட்டுமலர் வெளியீட்டு விழாவில் அவரைப் பாராட்டி எழுதுவதற்கு எமது கழகத்திற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நாம் பெருமையடைகின்றோம், புனிதவளன் விளையாட்டுக்கழகத்தின் ஆரம்பகால அங்கத்தவரான இவர் கழகத்தின் தலைவராக, செயலாளராக, விளையாட்டுப் பொறுப்பாளராக, விளையாட்டு வீரனாகச் செயற்பட்டு கழகத்தின் வளர்ச்சிக்கா உழைத்தவர். இன்றும் உழைத்துக் கொண்டிருப்பவர். அரச பதவியிலிருந்து ஓய்வுபெற்றாலும், சமூக சேவை, கல்விப்பணியில் அவ தொடர்ந்து செயலாற்றுவார் என்பதில் ஐயமில்லை. அவரதுசேவைநலன் பாராட்டு நிகழ்விலஅவரைப் பாராட்டுவதில் எமது கழகம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றது.

புனிதவளன் விளையாட்டுக்கழகம்,
யாழ்ப்பாணம்,

## நல்லை ஆதீன குருவின் ஆசி

அன்புசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலய அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் சிங்கராயர் தார்சீசியஸ் அவரைப் பாராட்டி விழா எடுப்பதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். ஆசிரியப்பணி என்பது மனித மேம்பாட்டில் முக்கியமான பணியாகும். குருவாகவும், தாய், தந்தையாகவும் தெய்வமாகவும் விளங்கும் பணி ஆசிரியப்பணி. தான்பெற்ற இன்பம்அனைத்து உயிர்களும் பெறவேண்டும் என்பதற்காக தான் கற்ற கல்வியை மாணவர்களுக்கு வழங்கி நல்லதோர் அதிபர் ஆசிரியராக பணியாற்றியமை எல்லோருக்கும் மன நிறைவைத் தருகின்றது. பாடசாலை என்பது மனித வாழ்வில் அத்திவாரமாகும். அதைஅமைத்துத் தருகின்றவர் ஆசிரியர். இவ் வித்தியாலய வளர்ச்சிக்கு அதிபர் திரு. சிங்கராயர் தார்சீசியஸ் ஆற்றிய பணி அளவிட முடியாதது. அவர் ஓய்வுபெற்றாலும் தொடர்ந்து கல்விப் பணி ஆற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக!.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
2 வது குருமஹா சந்நிதானம்

## என்றும் இறை ஆசீர் பெறுக

ஆசிரியர் சி. தார்சீசியஸ் அவர்கள் தம் அறுபதாவது பிறந்த தினத்திலே அவரும், அவர்தம் குடும்பத்தவர்களும் என்றும் நிறைந்த இறை ஆசீர் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

பழகுவதில் பண்பும், நிர்வாகத்திறமையும், வசதிகுறைந்த மாணவர்மட்டில் அதிக கவனிப்பும், கலையில் ஆர்வமும், சமூக மேம்பாட்டில் அர்ப்பணிப்பும், கொள்கையில் உறுதியும், ஆழ்ந்த இறைப்பற்றும் கொண்டவர். இவர் பணிக்கு இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், என்றும் நிறைந்த இறை ஆசீர் பெற வாழ்த்துகின்றேன்.

வண, பிலேந்திரன்
கிறிஸ்தவ நாகரிகத்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

## ஆசிரியர் சங்கம் வாழ்த்து

திரு. சி. தார்சீசியஸ் அவர்கள் யாழ். புனித மரியாள் வித்தியாலய ஆசிரியராக, அதிபராக ஆற்றிய சேவை யாழ். கல்வி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். யாழ். நகரத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக, விசேடமாக ஆரம்பக்கல்வியில் அகில இலங்கையிலும் முன்னணியில் திகழ்ந்த பாடசாலைகளில் ஒன்றாக மரியாள் வித்தியாலயம் திகழ்ந்தது என்றால் அதற்குப் பின்னணியில் திகழ்ந்தவர் திரு. சி. தார்சீசியஸ் என்றால் அது மிகையாகாது.

திரு. தார்சீசியஸ் அவர்கள் ஒரு திறமையான ஆசிரியர், திறமையான அதிபர், திறமையான கல்வி முகாமையாளர், ஒரு திறமையான தொழிற்சங்கத் தலைவன், திறமையான எல்லோராலும் போற்றப்படும் சமூக, சமயத் தொண்டன்.

தார்சீசியல் நீடூழி வாழ்க வளமுடன்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

## கல்விப்பணிப்பாளர் வாழ்த்து

அதிபர் திரு. சி. தார்சீசியஸ் அவர்கள் ஆசிரிய சவையில்40 வருடங்கள் பூர்த்தியாக்கியமை நீண்டகல்வித் தொண்டாகும். அவர்கள் அடக்கமாக இக்கல்லூரியில் 26 வருடங்கள் இருந்து சேவையாற்றியுள்ளார், அதுவும் 10 வருடங்கள் அதிபர் தலைமைத்துவம். இது மணிவிழாவிற்கு மகுடமாகும்.

பெற்றோர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் அவரது கல்வித் தொண்டைக் கௌரவிப்பது கல்விச் சமூகம் அவரது சேவையை மதிப்பதற்கு எடுத்துக்காட்டு. அவர்கள் பள்ளி என்ற நிறுவனத்தை விட்டு நீங்கினாலும் பள்ளிச் சூழலில் உள்ள சமூகத்திற்கு தொடர்ந்து உதவ வாழ்த்துகின்றேன்.

கலாநிதி சு. நா. கணிகாசலம்பிள்ளை
கல்விப் பணிப்பாளர்
[illegible]
வலயம்-1

(67010)

## மணிவிழா நாயகன்



## உயர்திரு. சிங்கராயர் தார்சீசியஸ்

★ பிறந்த திகதி: 04 - 07 - 1939
★ கல்வி: யா/ சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம், புனித பத்திரிசியர்
★ ஆசிரியர் பயிற்சி: கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசால
★ ஆசிரியர் பணியின் ஆரம்ப களம்: திரு. சென். ஜோசப் கல்லூரி.
★ திருமணம்: 21 - 11 - 1963.
★ தவப்புதல்வர்கள், புதல்வியர்: புதல்வர்கள் — 4, புதல்விகள் — 2

ஆசிரியர் பணியின் நீண்ட பாதையில்,..,

| பதவி | காலம் | பாடசால |
|---|---|---|
| ★ உதவி ஆசிரியர் — | 06-01-64—31-07-65 | அக்/ பொத்துவில் த. |
| ★ உதவி ஆசிரியர் — | 01-08-65—28-02-66 | திரு/ கும்புறுப்பிட்டி த. |
| ★ உதவி ஆசிரியர் — | 01-03-66—04-02-67 | திரு/ இறக்கக்கண்டி அ. |
| ★ உதவி ஆசிரியர் — | 05-02-67—14-09-67 | திரு/வெள்ளைமணல் மு |
| ★ உதவி ஆசிரியர் — | 15-09-67—31-12-72 | திரு/புனித.சூசையப்ப |
| ★ உதவி ஆசிரியர் — | 01-01-73—28-02-78 | யா/ புனித மரியாள் வி |
| ★ உப அதிபர் — | 01-03-78—27-08-90 | யா/ புனித மரியாள் வி |
| ★ அதிபர் S.L.P.S.I — | 28-08-90—03-07-99 | யா/ புனித மரியாள் வி |

சமூகசேவையும், பொதுப்பணிகளும், கலை, விளையாட்டுத் து
(10 ஆவது வயதில் சமூகப் பிரவேசம்)

★ 1948 — புனிதவளன் விளையாட்டுக்கழகம் நிறுவியமை

★ 1960 — நண்பர்கள் பலருடன் இணைந்து கலைக்கழகத்தை ... கால செயலாளராக விளங்கி பல நாடகங்களை கலை... தார். பல விருதுகளைப் பெற்றார்.

★ 1972 — 16 அமைப்புக்களைக் கொண்ட குருநகர் ஐக்கிய மு... ளாளராக, தலைவராகத் திகழ்ந்தார்.

★ 1974 — குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத்தை உருவா... மன்றம் இன்று இசை நடனக் கல்லூரியாக விளங்குகிறது... மலையிலும், யாழ்ப்பாணத்திலும் உதைபந்தாட்டச... ஆண்டுகள் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று அத... துணையாக இருந்தார்.

★ 1995 — வரை பல ஆண்டுகள் புனித யாகப்பர் பங்குச் சபை... விளங்கினார்.

★ 1997 — இன்று வரை யாழ். ப. நோ. கூ. ச. நெறியாளர் ச... இலங்கை தமிழர்ஆசிரியர்சங்கத்தில் திருகோணமலை... லாளராக இருந்து தற்போது யாழ். மாவட்டக் கிளை... உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விளக்கம் தேவை

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஆளுங் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்த உள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் எதிர்வரும் வியாழக்கிழமை சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடாகி உள்ளது. நாட்டின் வர்த்தகப் பிரமுகர்கள் இரண்டு கட்சிகளையும் பேச வைப்பதற்கு கடந்த ஒன்றரை வருட காலமாக எடுத்த முயற்சி இப்போது தான் கைகூடி உள்ளது.

ஆளுங்கட்சியும்எதிக்ர் கட்சியும் சுமார் மூன்று வருடங்களாக நாடாளுமன்றத்தில் (தெரிவுக்குழுவில்) 74 தடவைகள் கூடிப்பேசிய போதிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முழுதான கருத்திணக்கத்துக்கு வர முடியவில்லை· அந்த இடைவெளியை நிரப்பும் முயற்சியாக வர்த்தகப் பிரமுகர்களின் அனுசரணையுடன் மீண்டும் கூடப்போகிறார்கள். நல்லது;வரவேற்கத் தக்கது

தமிழ்மக்கள் கேட்கும், விரும்பும், எதிர்பார்க்கும் உரிமைகளை அதிகாரப் பரவல் திட்டம் என்று சொல்லப்படும் தீர்வுமுறை உள்ளடக்கியுள்ளதோ இல்லையோ—

தமிழர்களிடம் அது முன் வைக்கப்படுவதற்கு முன்னர் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் அதற்கு இணக்கம். சம்மதம் தெரிவிக்க வேண்டிய தேவை உண்டு. மேற்படி இரண்டு தரப்பாரும் ஒன்றாகச் சம்மதம் தெரிவிக்காத, கருத்திணக்கம் காணாத எந்தத் திட்டமும் தீர்வாக வடிவெடுக்க முடியாது.

இனப் பிரச்சினை தொடர்பான கடந்த சுமார் ஐம்பது வருட கால அனுபவமும் யதார்த்தமும் இதுவே. தமிழர்களுக்கு வழங்கக்கூடிய உரிமைகள் குறித்து இந்த இரு சாராருக்கும் இடையில் இணக்கம் ஏற்படாததாலேயே இனப்பிரச்சினை இன்றைய போராக மாறியுள்ளது.

ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் சேர்ந்து ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்கினால் மட்டுமே, அது தமக்கு ஏற்பு உடையதா, இன்று வரை தாம் அனுபவிக்கும் அடக்கு முறையிலிருந்து விடுதலை தர வல்லதா என்பதனைத் தமிழர்கள் பரிசீலனை செய்யமுடியும்;பின்னர் முடிவுக்கு வர இயலும்.

எனவே, வர்த்தகப் பிரமுகர்களின் பதினெட்டு மாத கால விடாமுயற்சி பயன்தரக்கூடியதாக, இருதரப்பினர்களும் அரசியல் லாபத்தை பின் கோடிக்குத் தள்ளி விட்டு, நாட்டு நலனை முன்னிறுத்தி, ஒரு நீதியான தீர்வுக்கு உளப்பூர்வமாக உழைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வுகாண விருப்பம் இல்லாமல் இந்த நாட்டின் மீது போரைத் திணித்ததில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சம பங்குண்டு.

ஆகையால் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பும் அவற்றையே சாரும், தேர்தல் ஒன்று விரைவில் வரப்போவதை மனதில் கொண்டு இருதரப்பும் தாம் சந்திக்கவும் பேசவும் இணக்கம் தெரிவித்தனவா, அல்லது உண்மையான அக்கறையுடன் தான் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்தனவா என்பது தெரிந்தாக வேண்டும்.

எதிர்காலத்தில் ஆளுங்கட்டில் ஏறுவது யார் என்பதனைத் தீர்மானிப்பது தமிழர்களின் வாக்குகளாகவே இருக்கும் என்பதனை கணக்குப்போட்டுத் தான் இப்படி ஓர் இணக்க நிலைக்கு இப்போது வந்திருக்கிறார்களோ என்பதும் தெரிந்தாக வேண்டும். அதில் விளக்கமும் தெளிவும் இல்லையேல் சந்திப்பதால் ஆகப்போவது என்ன?

# பட்டப்பகலில் கூரை பிரித்து வீட்டில் பொருள்கள் சூறை!

## கல்வியங்காட்டில்சம்பவம்

வலி கிழக்கு, ஜூலை 4

வீட்டில் இருந்தோர் வெளியில் சென்றிருந்த சமயம் — பட்டப்பகலில் — கூரை வழியாக உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்து தங்க நகைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்துள்ளனர்.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க வீதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வியாழன் பகல் 2 மணியளவில் இத்துணிகரத் திருட்டு இடம் பெற்றது.

பாடசாலை ஆசிரியையான தாயும், அவரது மகளும் பாடசாலைக்குச் சென்றிருந்த தருணம் பார்த்து எவருமற்ற வீட்டில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

தங்க நகை, மின்சார உபகரணங்கள் உட்பட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறையிடப் பட்டிருக்கிறது.

இது போன்ற திருட்டுச் சம்பவங்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

(ஐ – 180)

# சட்டநாதர் ஆலயத்தில் திருடிய பொருள்கள் மீட்பு

## திருடர்கள் படையினரிடம் சிக்கினர்

வலி கிழக்கு, ஜூலை 4

இரவுவேளை ஆலயம் ஒன்றில் இருந்து பெறுமதியான பொருள்களைத் திருடி எடுத்துக்கொண்டு அதிகாலை வேளை தப்பிச் சென்ற இருவர் படையினரிடம் சிக்கிக் கொண்டனர்.

இச் சம்பவம் கடந்த புதன் இரவு இடம்பெற்றது.

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்தின் களஞ்சிய அறைக்கதவை உடைத்தே பொருள்கள் திருடப்பட்டன. அங்கிருந்து அம்மனுக்குச் சார்த்தும் பெறுமதி வாய்ந்த 14 புதிய சேலைகள், மின்சார பாவனைப்பொருள்கள், சுவர் மணிக்கூடு, ஜெனரேட்டர், கற்பூரப் பெட்டிகள் என்பவற்றையும், இரண்டு உண்டியல்களில் இருந்த பணத்தையுமே இவர்கள் திருடியுள்ளனர்.

காலையில் ஊரடங்கு நீக்கப்பட்ட கையோடு — இருளோடு இருளாக — அப்பொருள்களுடன் யாழ். நகரப் பகுதிக்குத் தப்பிச் செல்வதற்காக கந்தர்மடம் பகுதி ஊடாகச் சென்று கொண்டிருந்தபோதே இவர்கள் இருவரும் அப் பகுதிப் படையினரிடம் சிக்கினர். படையினர் இருவரையும் விசாரித்தபோது திருட்டு அம்பலமானது. குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவரையும் படையினர் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இத்திருட்டு முயற்சியில் நான்கு பேர் பங்குபற்றியதாகவும் ஏனைய இருவரையும் பொலீஸார் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருடப்பட்ட பொருள்களில் ஜெனரேட்டரை மட்டும் திருடர்கள் ஆலயத்தின் வேறு ஒரு பகுதியில் ஒளித்து வைத்திருந்தது பின்னர் தெரிய வந்தது. பொலீஸார் அதனை மீட்டு ஆலயத்தில் ஒப்படைத்தனர்.

இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டோர் நகரப் பகுதியில் இடம்பெற்ற வேறு பல திருட்டுக்களுடனும் தொடர்புடையவர்கள் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

(ஐ–180 135)

# 40 ஆயிரம் போத்தல் பனஞ்சாராயம் கப்பலில் தெற்கே அனுப்ப ஏற்பாடு

அரியாலை, ஜூலை 4

யாழ். மாவட்டத்தில் இருந்து கப்பல் மூலம் பனஞ்சாராயத்தை தென்னிலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 40 ஆயிரம் போத்தல் சாராயம் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட இருப்பதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

வலிகாமம், வடமராட்சி கொத்தணி வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாராயமே போத்தல்களில் பாதுகாப்பாக அடைக்கப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

## கருத்தரங்கு

சுன்னாகம், ஜூலை 4

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாஜமும், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும் இணைந்து கிராமிய அபிவிருத்திக் கருத்தரங்கொன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தவுள்ளன.

சமாசத் தலைவர் இ. அரிகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி, வி. கிருஷ்ணசாமி, வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் வி. பாலசுப்பிரமணியம், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஜே.பி குணரத்தினம் மேற்படி சங்கத் தலைவர் க. மெய்யழகன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

திருமதி கோகிலா மகேந்திரன், செல்வி இ.சிவயோகம், கலாநிதி சபா ஜெயராசா ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்துவர்.

(உ-27)

## தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான தாச்சிச் சுற்றுப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தமது விவரங்களை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–9)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 4

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி இடம் பெறவிருந்த நோயாளர் கப்பல் சேவை மறுநாள் 8 ஆம் திகதியே நடைபெறும் என்று யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

7ஆம்திகதிகப்பலில்செல்லப் பதிவு செய்த நோயாளர்களை மறுநாள் காலை 7 மணிக்கு சமுகமளிக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

(ஐ-3-5)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தால் 97 ஆம், 98 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விசேட ஆங்கிலப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. டி. அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

# பாவத்தின் பரிசுதான் மக்கள் படுகின்ற துன்பம்; கிறிஸ்துவின் பரிவுதான் மக்கள் பெறும் இன்பம்!

படைப்புக்களில் ஒரு மேலான படைப்பாக மனிதனைப் படைத்த இறைவன் சகல படைப்புக்களையும் அவனிடம் கையளித்து அவற்றை விருத்தி செய்யும் பணியையும் அவனிடம் ஒப்படைத்தார். ஆனால் மனிதனோ காலப் போக்கில் படைத்த இறைவனை மறந்து படைப்புக்களுக்குமுக்கியத்துவம்கொடுக்கத் தலைப்பட்டான்.

இறைவன் தான் தேர்ந்து கொண்ட யூத இனத்தை வழி நடத்த பல தலைவர்களையும் வழி தவறிய போது குறிப்பாக இறைவாக்கினர்களையும் அனுப்பி மீண்டும் மீண்டும் அவர்களை நல்வழிப் படுத்த முயன்றார்.

இவ்வாறுஎரேமியாஸ்இறைவாக்கினரை இஸ்ராயேல் மக்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைக்க அனுப்பப்பட்டார்.

ஆனால் அவர்கள் அதற்குச் செவிமடுக்கத் தவறியதோடு அவரையும் துன்புறுத்தினர். ஆனால் எரேமியாஸ் இறைவாக்கினர் துன்புறுத்தலுக்கு அஞ்சவில்லை.

''ஆண்டவர் என்னோடு இருக்கின்றார். நான் யாருக்கும் அஞ்சத்தேவையில்லை. அவருடைய வார்த்தையை நான் பயப்படாமல் எடுத்துரைப்பேன்'' என்று சூளுரைத்தார். இறைவாக்குக்கு செவிமடுக்கத்தவறிய யூத இனத்தை இறைவன் கண்டித்தார்.

''ஒரே ஒரு மனிதன் வழியாகப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது; அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது (உரோ 5:12) இந்த ஆதாம் வரவிருந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தார். பாவத்தின் தண்டனையாக நாம் இவ்வுலகத்தில் பல இன்னல்களுக்காளானோம். நாம் இவற்றிலிருந்து விலகி ஓடமுடியாது. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி இவற்றை நாம் அனுபவித்தே தீரவேண்டும்.

இறைவன் எமக்குத் துன்பத்தைத் தருவதில்லை. எம்முடையபாவத்தின் பரிசுதான் இத்துன்பம் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். இத்துன்பத்தின் வழியாக நாம் தூய்மை பெறவேண்டும் என்பதே இறைவனது விருப்பம். எவ்வாறு தங்கம் நெருப்பிலிடப்பட்டு தூய்மை அடைகின்றதோ அவ்வாறு மனிதன் இத்துன்பங்களின் வழியாக தூய்மையடைகிறான்.

எமது உடலைவிட ஆன்மா மேலானது.அந்த ஆன்மாவை பரிசுத்தமாகப் பாதுகாத்து மீண்டும் இறைவனுக்கு அர்ப்பணிப்பது எங்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும். எமது ஆன்மாவை சீர்குலைக்கும் சக்திகளிலிருந்து எம்மை நாம் பாதுகாக்க வேண்டும்.

இறை அன்புக்கு நாம் சாட்சிகளாக வாழ வேண்டும் என அவர் விரும்புகிறார். நாம் பெற்றுள்ள விசுவாசத்தைச் செயலில் காட்டுதல் வேண்டும். செயலற்ற விசுவாசம் உயிரற்றதே என புனித யாகப்பர் கூறுகிறார். ஆகவே இறைமக்களாகிய நாம் கிறிஸ்தவன் என்ற பெயருக்கேற்ற வாழ்வு வாழ்ந்து இறுதியாக அவருடன்பேரின்ப இராச்சியத்தில் பங்குகொள்வோம். ★

-- அருட்சகோதரர் ச. அருளப்பா --

## ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

ஆனி 21

திங்கட்கிழமை

திதி: ஸப்தமி

மரண யோகம் பின் இரவு 2.56 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி முற்பகல் 9.29 வரை.

சுபநேரம்: 11.57 – 1.27

ராகுகாலம்: 7.27 – 8.57

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தை ஆயிரம் கொடுத்தாலும் திரும்பிவாராது.

— கன்னடப்பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்
# வெள்ளி விழா



## திருமலை-மட்டுநகர் ஆயரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் தனது 25 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தக் காலத்தில் எனது வாழ்த்துக்களையும் இறை ஆசிகளையும் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதன் ஆரம்ப செயற்பாடுகளுடன் நெருங்கி ஈடுபட்டிருந்த காரணத்தால் இந்த விழா எனக்கு பசுமையான நினைவுகளைத் தருகின்றது. அமரர் துணைவேந்தர் பேராசிரியர் கைலாசபதியின் ஒத்துழைப்பாலும் ஊக்கத்தாலும் ஓய்வுபெற்ற ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களின் வழிநடத்துதலில் உருவானது இந்த ஒன்றியம்.

இலங்கை ஆயர் பேரவையின் சிபார்சில் கிடைத்த உதவிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த நிலையம் வளர்ச்சியும்முதிர்ச்சியும் பெற்று பல துறைகளிலும் எமது மாணவர்கள் ஆர்வமுள்ள பங்காளிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருமலை—மட்டக்களப்பு மாவட்டத்தின் மாணவ மாணவிகளும் கணிசமான தொகையில் இவ் ஒன்றியத்துடன் ஈடுபட்டு நற்பயன் அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க மாணவ, மாணவிகள் நற்சாட்சிய வாழ்வை வாழ அழைக்கப்படுகிறார்கள். இவ்வழைப்பை இவர்கள் எந்தச் சவால்கள் மத்தியிலும் எதிர்கொண்டு ஏற்று நிறைவு செய்வார்கள் என்னும் நம்பிக்கையுடன் வாழ்த்தி, இறை ஆசி வேண்டி இந்த நடு நிலையம் பல்லாண்டு காலம் தொடர்ந்து கலங்கரை விளக்காக அமைய ஆசிக்கின்றேன்.

அதிவந், யோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
திருமலை – மட்டு.நகர் ஆயர்

## துணைவேந்தரின் வாழ்த்துரை

எமது பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக் காணும் இவ்வேளையில் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியமும் தனது 25 வருட நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியின் நோக்கங்களில் முதன்மையானது மாணவரின் ஒன்றிணைந்த ஆளுமையை வளர்ப்பதாகும். மாணவர்கள் கற்றல் தவிர்ந்த பிறவிடயங்களாலும் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இங்கு பல்வேறு துறை சார்ந்த மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு இன்றுவரை செயற்பட்டு வருவதோடு நாட்டில் இடம்பெயர்வுகள், நெருக்கடி நிறைந்த வேளைகளிலும் இம்மன்றம் ஆற்றிய, ஆற்றிவரும் பணிகள் போற்றத்தக்கதாகும்

இம்மன்றம் இளந்தலைமுறையினருக்கு சமய பண்பாட்டு, விழுமியங்களை அறியச் செய்வதோடு ஆன்மீக ரீதியில் மாணவர்களை நெறிப்படுத்தி வழிநடத்தியும் வருகிறது. மற்றும் கல்வியில் பின்தங்கிய கல்வியறிவு குறைந்த மாணவர்கள் கல்வியறிவைப் பெற்றுக்கொள்ள துணைபுரிவதோடுவசதிகுறைந்த மாணவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்து வருகிறது. கல்வி சம்பந்தமான கருத்தரங்குகளும் இம்மன்றத்தினால் நடத்தப் படுகின்றன. காலத்தின் தேவையை உணர்ந்து மக்களுக்கும் சமுதாயத்திற்கும் நிதானத்துடன் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு இன்றுவரை தளராமனத்தின் வழிநின்று செயற்பட்டு தனது 25 வருட பூர்த்தியில் வெள்ளிவிழாக் காணும் நிகழ்வு மற்றுமொரு பரிணாமத்தை எடுத்துக்காட்டுகிறது.

இம்மன்றத்தின் பணிகள் மேன்மேலும் வளர்ந்தோங்கவும் வெள்ளிழா சிறப்பாக அமையவும் இறைவனை இறைஞ்சி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

## இயக்குநரின் இதயத்திலிருந்து....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் தனது 25 வருட நிறைவை அணுகும் இந்த வேளையில் நான் நன்றி, மகிழ்வு முதலான உணர்வலைகளோடு நின்று சிந்திக்கின்றேன். விவிலியம் கூறும் யூபிலி உணர்த்துகின்ற அர்த்தங்கள் எமது ஒன்றியத்துக்கும் சாலப் பொருந்தும். அதனை வழிநடத்திய இறைவனுக்கு நன்றியோடு புகழ்பாடும் இந்தநேரம் இது கடந்தவற்றில் நல்லவற்றைப் பேற்றி அல்லாததை நீக்கி நிறைவை நோக்கிப் பயணம் செய்ய விழையும ஆவலை எண்ணி மனம் பூரிப்படைகிறேன்

எமது கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, சமய நிலைப்பாடுகளின் ஊடாகத் தனது தனித்துவத்துக்கு உரித்தான விதத்தில் கத்தோலிக்க மாணவர்களின் உருவாக்கத்தைத் தொடர்ந்து 25 ஆவது ஆண்டிலே தடம் பதித்து நிற்கின்றது

### ஒன்றியத்தின் குறிக்கோள்கள்:

★ இந்த மண்ணில் அர்த்தமுடன் தம்மை ஆழமாக அர்ப்பணிக்கக்கூடிய கிறிஸ்தவத் தலைவர்கள் உருவாகும் சூழ்நிலையை ஏற்படுத்துதல்.

★ உறுப்பினர்களின் வாழ்வு அவர்கள் முகம்கொடுக்கும் சவால்கள், எதிர்கொள்ளும் போராட்டங்கள், துன்பங்கள் என்பனவற்றை இறைவார்த்தை, திருச்சபை மரபு என்பவற்றின் ஒளியில் கண்டு இவற்றால் உறுதி பெற்று வாழமுயற்சித்தல். இந்த முயற்சிக்கு ஒத்திசைவாக இறைவார்த்தையையும் திருச்சபையின் படிப்பினைகளையும் கற்று கத்தோலிக்க அறிவும் சமூக மெய்மைகள் பற்றிய தெளிவும் கொண்ட மாணவர்களை உருவாக்குதல்.

★ மாணவர்களின் பல தரப்பட்ட திறமைகள், ஆற்றல்களை இனங்கண்டு அனைத்துப் பரிமாணங்களிலும் வளரச் செய்தல்.

★ நிலையத்தில் மேற்கொள்ளப்படும் ஆன்மீகப் பணிகள் உறுப்பினர் ஒவ்வொருவரினதும் வாழ்வில் அவர்களுடன் இணைந்து நடந்து அவர்களின் ஈடுபாடு, ஆக்கசக்தி அனைத்திலும் அவர்களை ஊக்குவித்து இளம் உள்ளங்கள உருவாக்க முயலும் புதியமொழி மேற்கொள்ளும் புதிய அடையாளங்களுக்கு வழிவகுத்தல்.

★ ஈடுபாட்டால் உருவாகும் ஆன்மீகத்தை உருவாக்குதல்.

### ஒன்றிய உருவாக்கத்தின் நிலைகள்:

எமது ஒன்றிய உருவாக்கத்தில் 3 நிலைகளை நாம் இனங்காணலாம்.

★ அறிவு வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் இடமாக—

★ சமூகத்தில் நடைபெறும் சமூகக்கட்டுக்கள் எவையும் இல்லாத ஓர் இடமாகவும் இளமைப் பருவத்திலே ஏற்படும் பலவித கேள்விகள், சந்தேகங்கள் இவற்றை எந்தவித தயக்கமும் இன்றிக் கேட்டுத் தெளிவுபெற வாய்ப்பளிக்கும் இடமாக—

★ நற்செய்தி அடிப்படையில் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, சமய நிலைப்பாட்டில் திறனாய்வும், விழிப்புணர்வும் கொண்ட இடமாகவும் இது மாற்றம் பெறுகிறது.

### நாளை — தொலைநோக்கு:

மலரும் 3 ஆம் மிலேனியம் ஒரு தனித்துவமான நிலையை உருவாக்க இருக்கின்றது. இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை பின்வருவன:–

★மிகவும் சொற்பமானவரே பணவசதி படைத்தவர்களாகவும் மற்ற எல்லோரும் வறுமைக்குள்ளானவர் ளாகவும் இருப்பார்கள்.

★ வாழ்க்கைமுறை மிகவும் சீர்கெட்டதாக வரும் மில்லியன் கணக்கில் குழந்தைகள் அநாதைகளாகி தொழில் எதுவும் இல்லாதவர்கள் ஆவர்.

★ பணம் அற்றவர்கள் பயனற்றவர்களாக எறியப்படுவார்கள்.

★ வேலையற்ற இளைஞர் இருபக்கமும் போருக்காகப் பயன்படுத்தப்படுவர்.

இதுதான் நாம் வாழப்போகும் உலகம். இந்த நிலைக்கு முகம்கொடுக்க எமது ஆலோசனைகளில் சிலவாக சிக்கனமான வாழ்வு, கடும் முயற்சி, சுயதொழில் என எடுத்தியம்ப விழைகிறோம்.

### அன்பு நெஞ்சங்களே!

என் உள்ளத்தின் நம்பிக்கை நிறைந்த ஓர் ஆவல் 1974 இல் 20 –30 வரையிலான உறுப்பினருடன் ஆரம்பித்தபோது அனைத்துச் செயற்பாடுகளையும் உறுப்பினரே முன்னின்று செய்துகொண்டு தமது வழிகாட்டியைத் தம்மோடு நிற்கச் செய்தனர். இன்று 1999 இல் நாம் 400 உறுப்பினராய் பரிணமித்துள்ளோம் மீண்டும் நமக்குள்ளே பல விமலதாசன்கள் பேணாட்டுக்கள் முகிழ்ந்திருப்பது கண்டு என் மனம் மகிழ்ந்து நிற்கின்றது. உங்களுக்கே உரித்தான விதத்தில் ஆவியின் பொழிவு பெற்று நாம் கூறிய அறிவு, சமூக, ஆன்மீக அலகுகளில் முன்னெடுத்துச் செல்லுங்கள். செல்வோமா...?

அருட்திரு. மா, றேஜீஸ் இராசநாயகம்
வழிகாட்டி,
நல்லாயன் நடு நிலையம், திருநெல்வேலி.

## வரலாற்றி

★ 1974 ஆம் ஆண்டு University of Sri Lanka, பெயரில் மாற்றப்படுகின் பேராசிரியர் கைலாசபதிய பேராசிரியர் இந்திரபால னர்.

★ 1974 ஆம் ஆண் னாக நுழைந்த அருட்த காட்டுதலில் தமிழ் வர்கள் செயற்பட ஆரம்

★ 1975 ஆம் ஆண் இதழ் வெளியிடப்படுகின்

★ 1977 ஆம் ஆண் பாதிக்கப்பட்ட மக்களுக் தங்குமிட வசதிகள் அ

★ 1979 ஆம் ஆண் சட்டம் கொண்டுவரப்படு வர் ஒன்றியம் தனது உரிமைகள் தொடர்பான கொள்கின்றது.

★ 1981 ஆம் ஆ சிலன் அடிகளைத் அருட்திரு இராஜேந்திர அருட்தந்தை சந்திரகா நடத்துகின்றனர்.

★ 1981 ஆம் ஆ தில் மாணவப் பிரதிநி

★ 1983 ஆம் ஆ பதியால் இன்றைய வழங்கப்படுகின்றது. வ. தியோகுப்பிள்ளை நிலைய நிர்மாணத்துக் கள் வழங்கப்படுகின்ற

★ 1983 – அரு நிலைய இயக்குநராக

★ 1985 ஆனி 1 கான சுவீகாரம் வழங்

★ 1985 கார்த்தி துக்கான அடிக்கல் ய நாயகம் ஆண்டகையா யர் சு. வித்தியானந்

★ 1986 ஆம் ஆ யாழ். ஆயர் தலைமை ஒப்புக்கொடுக்கப்படுகின்

★ 1993 ஆம் ஆ நாயகம் நிலையத்தை ஏற்கின்றார்.

★ 1995 ஆம் ஆ காமப் பிரதேச இடப் செயற்பாடுகளும் ஸ்த

★ 1996 ஆனி ம கள் மீண்டும் நிலைய

★ 1998 தை ம யாழ். ஆயரால் வழி றார்.

★ ஜீவப்பிரயத்த களால் மேடையேற்ற

★ 1998 ஆவண அடிகள் மீண்டும் நி றார்.

★ 1999 ஆடி 4 யத்தின் வெள்ளி வி


### விழா சிறப்புற வாழ்த்துவோர்:

ATPUTHA
Trading Company,
199 (404A), Hospital Road, Jaffna.

NALLI SILKS
121/1, Power House Road,
Jaffna.

AMBAL
Communication &
Photostat Service
Campus Lane, Thirunelveli,

KALYANI CREAM HOUSE
73, Kasthuriar Road, Jaffna,

லொயலாஸ்
125, [illegible]

E.S. PERAMPALAM
50, Kasthuriar Road, Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்தோலிக்க மாணவர் ஒன்றிய சிறப்பு மலர்



## ஆன்மீகப் பணியகத்தின் அரும்பணிகள் தொடர்க

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவுபெறும் இவ்வேளையில் இப்பணியகத்தின் இயக்குநர், உறுப்பினர் அனைவரையும் மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

கல்வியின் நோக்கம் மனிதநேயமும் மானிடத் தன்மையும் பொருந்திய சிறந்த ஆளுமையுள்ளவர்களை உருவாக்குவதே. இந்த இலட்சியத்தை அடைய ஒருமனிதனின் இறை நம்பிக்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. சமயம் காட்டும் நல்வழியில்—அறவழியில்—அன்பு வழியில் வாழும் போது ஒழுக்கமும் உயர் பண்பும் மாணவர் மத்தியில் வளர வாய்ப்பு உண்டு. இந்த நன்நோக்கை அடைய கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் தொடர்ந்தும் முயல வேண்டும் என ஆசிக்கின்றேன்.

இந்த ஆன்மீகப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை பல குருக்கள் இப்பணியகத்தில் பணிபுரிந்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியிருக்கின்றார்கள். இன்னும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்துறை நிபுணர்கள், மாணவர்கள் ஆகியோர் இப் பணியகத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு உதவியுள்ளனர்—உதவி வருகின்றனர்.

இப்பணியகத்தின் தற்போதைய இயக்குநர் அருட்தந்தை றெஜிஸ் ராஜநாயகம் அடிகளுக்கும் இவ்வேளையில் எனது மனம் திறந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

இக்கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பணிகள் மேன்மேலும் வளம்பெற்று மாணவர்களின் ஆன்மீக முன்னேற்றத்துக்கும் — தமிழ் மண்ணின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கும் தொடர்ந்து உழைக்கவேண்டும் என வாழ்த்தி இறையாசி கூறி நிற்கின்றேன்.

கிறிஸ்துவின் பணியில்
பேரருட்திரு இராயப்பு ஜோசேப் ஆண்டகை
மன்னார் ஆயர்.

## யாழ். ஆயரின் ஆசி உரை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டான இவ்வாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டாகும்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றோடு அதன் தொடக்கத்திலிருந்தேபின்னிப்பிணைந்ததாக உள்ளது கத்தோலிக்க மாணவர்கள் மன்றமாகும். இம் மன்றம் தனது 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இயேசு சொன்னது போல எவரும் விளக்கை ஏற்றி நிலவறையிலோ மரக்காலுக்குள்ளோ வைப்பதில்லை. மாறாக உள்ளே வருவோருக்கு ஒளி கிடைக்கும்படி அந்த விளக்குத் தண்டின் மீது வைப்பர். (லூக் 11: 33) உங்கள் கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவில் ஒளி பெறவேண்டும்.

எமது சமூகத்தின் நாளைய தலைமை நீங்கள். எமது மக்களின் வளர்ச்சியும், சிறப்பும், எழுச்சியும் உங்கள் பயிற்சியிலும் சுயநலனற்ற சிந்தனையிலும் தங்கியுள்ளது. சமூகப்பிரக்ஞையற்ற புத்திஜீவிகள் சமூக எழுச்சிக்குப் பெரும் தடையாக இருப்பதைக் காண்கின்றோம்.

ஒரு சமூகத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு அவசியமானது என்பதை மறக்கமுடியாது என்பது வரலாறு தரும் உண்மை. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இந்த வரலாற்று நெருக்கடியில் யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கிறிஸ்தவ மாணவர்களின் பங்களிப்பு இன்றைய தேவையாகும்.

இதை இளம் பட்டதாரிகளிடமிருந்து திருச்சபை வேண்டி நிற்கிறது.

எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து இறையாசீரை வழங்குகின்றேன்.

இறைபணியில் இணையும் உங்கள் ஆயர்
பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

## ...லிருந்து...

...- பரமேஸ்வராக் கல்லூரி, ... Jaffna Campus என்ற ...றது. துணைவேந்தராகப் ...ம் கலைப் பீடாதிபதியாகப் ...ாவும் பொறுப்பேற்கின்ற...

...டு – கலைப்பீட மாணவ... ...ந்தை ஜெயசீலனின் வழி... ...ங்களூ கத்தோலிக்க மாண... ...பிக்கின்றனர்.

...டு – 'Friend' என்ற ஓர் ...றது.

...டு – இனக் கலவரத்தால் ...தக் குருவிமடு கிராமத்தில் ...மெக்கப்படுகின்றன.

...டு - பயங்கரவாதத் தடைச் ...கிறது; கத்தோலிக்க மாண... ...செயற்பாடுகளை மனித ...விடயங்களுடன் இணைத்து...

...டு - அருட்தந்தை ஜெய... ...தாடர்ந்து குறுகிய காலம் ...ாவும் அதனைத் தொடர்ந்து ...ந்தனும் நிலையத்தை வழி...

...டு – 'Pan Asian' கூட்டத்... ...தி பங்குபற்றுகின்றார்.

...டு – பேராசிரியர் கைலாச... ...நிலையத்துக்கான காணி ...அன்றைய யாழ். ஆயர் ...ஆண்டகை அவர்களால் ...கென 2 மில்லியன் ரூபாக்... ...ா.

...திரு அன்ரன் மத்தாயஸ் ...பொறுப்பேற்கின்றார்.

... – ஒன்றியக் கூட்டத்துக் ...கப்படுகின்றது.

...கை 10 - ஒன்றியக் கூட்டத்... ...ழ். ஆயர் தோமஸ் சவுந்தர... ...லும் உப வேந்தர் பேராசிரி... ...னாலும் நடப்படுகின்றன.

...டு ஆடி மாதம் 5 ஆம் திகதி ...ல் சிற்றாலயத்தில் திருப்பலி ...றது.

...டு அருட்திரு றெஜிஸ் இராஜ... ...வழிநடத்தும் பொறுப்பை...

...டு ஐப்பசி 30 ஆம் திகதி வலி... ...பெயர்வுடன் நிலையத்தின் ...பிக்கின்றன.

...தம் அருட்திரு றெஜிஸ் அடி... ...தைப் பொறுப்பேற்கின்றார்.

...தம் அருட்திரு சூசைநாதன் ...ாட்டியாக நியமிக்கப்படுகின்...

...ம் என்ற நாடகம் மாணவர் ...படுகின்றது.

...மாதம் அருட்திரு றெஜிஸ் ...லயத்தைப் பொறுப்பேற்கின்...

...த்தோலிக்க மாணவர் ஒன்றி... ...ா.

## ஒன்றியத் தலைவரின் உணர்வலைகள்

ஒரு நிறுவனம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருப்பதற்கு அதன் நோக்கம் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எமது நல்லாயன் நிலையமானது அதன் அங்கத்தவர்கள் குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கல்வியினைப் பெற்றுக் கொள்ளல், சமூக சிந்தனை, ஆன்மீக வளர்ச்சி ஆகியவற்றில் தேடல்களை கொண்டவர்களாக செயற்படுவதை நோக்கமாக கொண்டுள்ளது. எமது கத்தோலிக்க மாணவர் ஒன்றியமானது அதன் உறுப்பினர்களின் கல்வி வளர்ச்சி, சமூகசிந்தனை, ஆன்மீக ஈடேற்றம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு கருத்தரங்குகள் கூட்டத்தொடர்கள் என்பவற்றை நடத்தி வருகின்றது. எமது வழிகாட்டி அருட்திரு. மா. றெஜிஸ் இராஜநாயகம் அவர்கள் எம்முடன் உறுதுணையாக இருந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எமது நிலையத்தின் நோக்கினை கருத்திற் கொண்டு வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி புகட்டி வரும் எமது உறுப்பினர்கள் இந்நன்னாளில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் அமைந்துள்ள கட்டடத்தின் முகப்புத் தோற்றம்

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற மகுடவாசகத்தைக் கொண்டுள்ள அன்னையாம் பல்கலைக்கழகத்தின் (Alma Mater) புகழை எத்திசைக்கும் பரப்ப எமது நிலையத்தின் உறுப்பினர்கள் என்றும் கடப்பாடு உணர்வுள்ளவர்களாகச் செயற்படுவார்கள் என்பது எனது அவா.

பல வழிகளில் மாறிவரும் உலகில்—பல சவால்கள் நிறைந்த—புதிய ஆயிரமாம் ஆண்டில் காலடி வைக்க உள்ள எம்மை மனித மாண்புகளை மதித்து வாழ இறை மதிப்பீடுகளை கிறிஸ்தவ விழுமியங்களை எமக்குப் புகட்டி வரும் இந்நிலையம் தனது பொறுப்பை என்றும் திறம்பட ஆற்ற என்றும் எம்மை வழிநடத்தி வரும் எல்லாம் வல்ல இறைவன் தனது ஆவியின் கொடைகளை நிறைவாக பொழிவாராக.

'நீங்கள் என் சாட்சிகள்; வாழ்வினில் காட்டுங்கள்'

நன்றி

யோ. கோல்டன்
தலைவர்
கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

LAVANYA
Dental & Optical Service
525, Hospital Road, Jaffna.

New Lanka Traders
222, Stanley Road, Jaffna.
T. P. No. 021 - 2062, 021 - 2838

LINGAM'S SILK HOUSE
18, Modern Market,
Power House Road, Jaffna.

RAJAH CREAM HOUSE
36, Kasthuriar Road, Jaffna.

இளவரசி
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

LINGAN CREAM HOUSE
119, Kasthuriar Road, Jaffne,
[67124]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி ஜீத் சிவசத்தியபாலன்

(மாணவி G. C. E. O/L யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஜீத் சிவசத்தியபாலன் 30 – 06–1999 அன்று அகாலமரணமானார்.

இவர் சிவசத்தியபாலன் யோகினியின் அன்பு மகளும் வினோத் (ஆண்டு 10), றஜீத் (ஆண்டு 6) (மாணவர்கள் யூனியன் கல்லூரி. தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஏழாலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை பழையமாணவியும், கலைமகள் தனியார் கல்விநிலைய மாணவியும், சூராவத்தையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவபாக்கியம் மற்றும் காலஞ்சென்ற நவரத்தினம் மேபல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. திருமதி சந்திரநாயகம் சறோஜினிதேவி, திரு. திருமதி அரியரத்தினம் பத்மினிதேவி (கொழும்பு), திரு. திருமதி சிவபாலன் ரஞ்சினிதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற சத்தியபாமாதேவி, திரு. திருமதி சந்திரகுமார் பாமினிதேவி (கனடா) ஆகியோரின் மருமகளும், திரு. திருமதி முருகானந்தராஜா வசந்தநாயகி (கொழும்பு), திரு. திருமதி றொஜினோல்ட் பத்மினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், றொகான் (ஜேர்மனி), துஷ்ஷானி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும். கிஷாந்தன், நிஷாந்தி, அபர்ணாத், அபிமன்யு (கொழும்பு), தேனுகா (ஜேர்மனி) ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-7-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி சிவசத்தியபாலன் [தந்தை]
சி. முருகானந்தராசா
(சிறிய தந்தை)

சூராவத்தை,
சுன்னாகம்.

(67152)

# கண்ணீர்க் காணிக்கை



## செல்வி ஜீத் சிவசத்தியபாலன்

(மாணவி G. C. E. (O/L), யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

தோற்றம் 03 – 03 – 1983 மறைவு 30 – 06 – 1999

அருமை மகளே ஜீத்....!
உன் விபரீத முடிவால்
உனை இழந்தோம்...
எங்கள் குடும்பச் செடியில்
மணம் வீச மலர்ந்த முதல் பூ நீ...
வாடாத மலர் என எண்ணி
உன்னைச் சீராட்டினோம்...
நீயோ...
எம் குடும்ப விளக்கே!
ஏன் எரிய மறுத்தாய்?
உன் நினைவுகளே
இனி எம் வாழ்க்கையானதோ!

துயரில் குமுறும்;
குடும்பத்தினரும்,
சூராவத்தை
மயிலங்காடு வாழ் மக்களும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(67155)

## பயிற்சி வகுப்பு

கோழி வளர்ப்புத் தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் செவ்வாய், புதன் கிழமைகளில் யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் இருபாலாரும் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கால்நடை வைத்திய அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (க)

## ஈழத்துப்..

(3 ஆம் பக்கத் தொடர்)

நின்று நிதானித்துச் சிந்தித்துச் செயற்படும் சிறந்த பண்பு கொண்டவர்.

கவிதையோ, காவியமோ, கட்டுரையோ, நாடகமோ, நாவலோ உருவத்தில் அது எப்படியிருந்த போதிலும் அதை இலக்கியம் என்று சொல்வதற்கு இரண்டு தகுதிகள் இருக்க வேண்டும்.

முதலாவது அதில் ஓர் இலக்கு இருக்க வேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ, புறத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும்.

மற்றையது அதைச் சொல்லும் விதம், நடை, கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சுவை இருக்க வேண்டும்.

இந்த இரண்டில் ஏதாவது ஒன்று இல்லாமற் போனாலும் அதை இலக்கியம் என்று கொள்ள முடியாது. இது இலக்கியத்துக்கென வரதர் பிரகடனப்படுத்தியுள்ள இலக்கணம். இந்த இலக்கணத்துக்கு இலக்கியமாக அவரது படைப்புக்கள் அமைந்துள்ளன.

சிந்தனையில் தெளிவும் தூய்மையும் நேர்மையும் புதுமைப் பிடிப்பும் கொண்ட வரதர் பாரம்பரியமான சைவ ஆசார ஒழுக்கம்மிக்க குடும்பத்தில் தோன்றி, மிக எளிமையான வாழ்வியல் சூழலின் இயல்பை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தவர். படிப்படியாக உயர்ந்து வாழ்க்கையில் முன்னேறியவர். மலேசியாவில் பிறந்து வாழ்ந்த தமது உறவினரான மகாதேவி என்ற பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவர். முற்போக்கு எண்ணங் கொண்ட செந்தாமரை, தேன்மொழி, மலர்விழி என்ற மூன்று பெண் குழந்தைகளுக்குத் தந்தையாக விளங்குகின்றார்.

படாடோபமின்றி எளிமையாக எதைச் செய்தாலும் அவரது அந்த முயற்சியில் புதுமை மிளிரும்.

### புதுமை மிளிரும்

குழந்தை இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்ட வரதர் குழந்தைகள் படித்து மகிழவென தேன்மொழி வாசகம் என்ற அரிச்சுவடி நூல்களைக் கவர்ச்சியான படங்களுடன் இலகுவான தமிழில் வெளியிட்டார். புதிய புதிய விடயங்களில் பரிசோதனை நிகழ்த்துவதில் ஆர்வம்மிக்க வரதர் இலக்கிய வளர்ச்சிக்காக மறுமலர்ச்சி, ஆனந்தன் என்பவற்றையும் கவிதைக்கென 'தேன்மொழி' சஞ்சிகையையும் செய்திக்கென 'புதினம்' 'வெள்ளி' என்ற பத்திரிகைகளையும் மாணவர்க்கென' அறிவுக்களஞ்சியம்' என்பவற்றையும் வெளிக்கொணர்ந்து சஞ்சிகைத் துறைக்கு வழிகாட்டினார்.

கதை, கவிதை, நாவல் தவிர இவர் சமீபத்தில் வெளியிட்ட 1930 — 40களில் யாழ். மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் 'மலரும் நினைவுகள், என்ற நூல் பல தரவுகளைத் தந்திருப்பதால் சமூக வரலாற்றுக்கான மதிப்புமிக்க ஆவணமெனப் பலராலும் போற்றப் படுகின்றது.

பவளவிழாக்காணும் சாதனையாளரான மூத்த எழுத்தாளர் திரு. வரதர் அவர்கள் தேகாரோக்கியத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இலக்கியப்பணியாற்ற இறையருள் துணை நிற்கப் பிரார்த்திப்போம். வாழ்க வரதர்!

# மக்கள் முகம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நாடறிந்த நற்கலைஞன். பன்னிரண்டு வயதில் மேடையில் கால்பதித்த இவரின் ஆற்றல் பரமேஸ்வராக் கல்லூரியில் மேடையேறிய (1950) மோலியரின் 'உலோபியின் காதல்' என்ற நாடகம் மூலம் தெரிய வந்தது. நாடகக் கலைஞர் சானா சண்முகநாதனின் நெறியாள்கையில் முறைப்படி நாடகத் துறையைக் கற்றார்.

அமரர் K. K. R. செல்லையா இவரது குருவாக அமர்ந்த காலகட்டமும் உண்டு. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் பட்டதாரி. தனது நாடக ஆற்றலை அங்கு மெருகேற்றிக் கொண்டார். 1951 முதல் குரும்பசிட்டி சன்மார்க்க நாடகமன்றத்திலும், மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்திலும் நாடகத்துறைப் பொறுப்பாளர் என்ற வகையில் பல நாடகங்களை எழுதி மேடையேற்றியும், அவற்றில் நடித்துமுள்ளார். கலைக்கழகப் பரிசுபெற்ற நாடகங்களில் முக்கிய பாத்திரங்களேற்று நடித்துள்ளார் 1978 இல் அரங்கக் கல்லூரி தொடங்கியவேளை அதில் சேர்ந்து புதிய பாணி நாடகநுட்பங்களைக் கற்றும், கோடை, பொறுத்தது போதும், சங்காரம் ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்களைத் தாங்கி ஆடியும், பாடியும் நடித்துள்ளார். கலைப்பேரரசு, நாடகமாமணி ஆகிய பட்டங்களை நாடகவுலகு இவருக்கு உவந்தளித்துக் கௌரவித்துள்ளது. 1998 இல் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் விருது நாடகத்துறைப் பணிக்காக இவருக்கு வழங்கப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகப்பிரதிகளை எழுதியுள்ளார். இறுதிப்பரிசு, நாடகம், கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், மயில், தாளக் காவடி, அரங்கக் கலைஞர் ஐவர் கலையுலகில் கால்நூற்றாண்டு என்பன இவர் ஆக்கி நூலுருவில் வெளிவந்துள்ளன. யாழ். இலக்கிய வட்டத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய இவர், இன்று செயலாளராகவுள்ளார். சன்மார்க்கசபை, தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம், கம்பன் கழகம் என்ற கலைஇலக்கிய நிறுவனங்களிலும் முக்கிய உறுப்பினராக விளங்குகிறார். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நாடக வளர்ச்சி நிதியத்தை உருவாக்கி, வளர்ந்து வரும் வல்லமை மிக்க இளங்கலைஞர்களை வருடாவருடம் ஊக்கிவித்து உருவாக்கி வருகிறார். 19 ஆம் நூற்றாண்டு அண்ணாவி கந்தப்பிள்ளையின் தாளக்காவடிக் கிராமியக் கலைக்கு இன்று அண்ணாவியராக விளங்கிவருகிறார். யாழ்ப்பாணத்துக் கிராமியக் கலைகளைப் பேணப் பெரு முயற்சி எடுத்து வருகிறார். நாடகத்துறை வல்லுநராக, எழுத்தாளனாக, பெருந் தொண்டனாக மிளிரும் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரைபைக் கலாபூஷணம் விருது தேடி வந்து சேர்ந்து பெருமை பெறுகிறது.

— செம்பியன்

சண்டிலிப்பாய், ஜூலை 4

இளவாலையைச் சேர்ந்த டாக்டர் சி. கணேசலிங்கம் அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து 36 வருடகாலம் பணியாற்றி கடந்த 30-06-99 ஆம் திகதியிலிருந்து தமது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் பதுளை, தம்பதெனியா தலம்பிற்றியா, மொறவேவா, நிந்தவூர், பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி மக்களினதும், சுகாதார சேவை உயரதிகாரிகளினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். தமது சேவையில் நீண்ட காலத்தைப் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இவர் அர்ப்பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் நிலவிய அவசரகாலச் சட்ட நடவடிக்கைகளின் போதும், ஊரடங்குச்சட்டம் தொடர்ந்து அடிக்கடி நிலவிய வேளைகளிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது வைத்திய சேவைகளை மேற்கொண்டு வந்ததை மறந்துவிட முடியாது.

இவர் கடந்த 30 ஆம் திகதி (30-6-99) பதவியிலிருந்து இளைப்பாறினார். தற்போது யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வைத்தியஅதிகாரிகளுக் ான பற்றாக்குறையை கருத்திற்கொண்டு மக்களுக்குத் தொடர்ந்தும் வைத்திய சேவையை ஆற்றவேண்டும் என்ற குறிக்கோளுடன் டாக்டர் கணேசலிங்கம் மீள நியமனம் பெற்றுத் தொடர்ந்தும் இளவாலை அரசினர் மத்திய மருந்தகத்தில் பணிபாற்றி வரச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

★ ★ ★ ★

நல்லைக் குருமணியின் பிரதம வாரிசான யாழ். கந்தர்மடம் கான கதாவாரிதி வாகீச கலாநிதி பிரம்மஸ்ரீ சிவ. வை, நித்தியானந்த சர்மாவுக்குத்திருகோணமலைஇந்துஇளைஞர் மன்றம் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தது.

திருகோணமலை மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான சித்திரைத் திருவிழாவை முன்னிட்டுத் தொடர்ந்து 12 நாள்கள் தேவிமகத்துவம் குறித்து இசைச் சொற்பொழிவாற்றியதற்காகவே அவருக்குத் திருகோணமலை இந்து இளைஞர் மன்றத் தலைவர் சிவபாதசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ-6)

★ ★ ★

யாழ். இந்துக்கல்லூரி மாணவனான தர்மகுலசிங்கம் தர்மேந்திரா யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்ற கவிதைப் போட்டியிலும் வடக்கு— கிழக்கு மாகாண ரீதியாக நடைபெற்ற கவிதைப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். தற்போது தேசிய மட்டத் தமிழ்த்தினக் கவிதைப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை அவர் பெற்றுள்ளார். இந்துக்கல்லூரி கலைப்பிரிவு மாணவனாகிய இவர் 'குழந்தைக் கவியமுதம் i. ii' என்ற நூல்களின் ஆசிரியருமாவார். சஞ்சீவிக் கவிஞர்களில் ஒருவராகவும் இருக்கின்றார். (ஐ–30)

★ ★ ★ ★

கொக்குவில் இந்துக்கல்லூரியில் 10 வருடங்களாகச் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றிய ஊரெழுவைச் சேர்ந்த ஆசிரியர் ச. துரைவீரசிங்கம் 14. 6. 99 தொடக்கம் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால சித்திர பாட ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் ஒரு சிறந்த சித்திர ஆசிரியர் மட்டுமல்லாது சிற்ப வேலைகளில் வல்லுநர், நுட்பமான முறையில் பல சிலைகளை வடித்துக் கொடுத்த பெருமைக்கு உரியவர் ,நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வெண்கலச் சிலையை வடித்தவர்களுள் இவரும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...த்தியாலய (O.L.R.) அதிபர்

...ார்சீசியஸ் (S L. P. S. I.) அவர்களின்

# ...ணிவிழா சிறப்புமலர் (1999 - 07 - 04)

...கன்



...யஸ் S. L. P. S. I

...த்திரிசியார் கல்லூரி.
...கலாசாலை.
...கல்லூரி.

...,

...ாடசாலை

...ில் த. க. பாடசாலை
...ட்டி த. க. பாடசாலை
...ண்டி அ.மு.க பாடசாலை
...ணல் அ. மு. கி. க. பாடசாலை
...சயப்பர் றோ.க.ஆண்கள் பாடசாலை
...பாள் வித்தியாலயம்
...பாள் வித்தியாலயம்
...பாள் வித்தியாலயம்

...ட்டுத் துறைகளும்

...ம

...த்தை ஸ்தாபித்து நீண்ட ...ள கலை உலகிற்கு அளித்...

...கி முன்னணியின் பொரு...

...உருவாக்கினார். இக்கலா...ளங்குகின்றது. திருகோண...தாட்டச் சங்கத்தில் பல... அதன் வளர்ச்சிக்கு உறு...

... சபையின் செயலாளராக

...ளர் சபையின் உறுப்பினர் ...ணமலைக் கிளையில் செய...க் கிளையின் தலைவராக

## யாழ். ஆயரின் உளங்கனிந்த ஆசி

யாழ். புனித அடைக்கல நாயகியின் கலாசாலை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் திரு. சி. தார்சீசியஸ் அவர்களின் சேவைநலம் விதந்து பாராட்டற்குரியது.

''உன் மனிதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அவனுக்கு அதிகாரத்தைக் கொடு'' என்பது அறிஞர் அனுபவ வாக்கு. உண்மையில், பெரும்பான்மை ஏழைமக்கள் கல்வி பயிலும் இக்கலாசாலையின் உயர்வுக்காக அதிபர் தகைமை பெற்ற இவர், தமது அன்பாலும், புன்னகையாலும்; அரவணைக்கும் பண்பாலும், கைம்மாறு கருதாக் கடமைகளாலும், நிருவாகத்திறனாலும் தமது மனித மாண்பை மலரச் செய்துள்ளார்.

மேலும் விளையாட்டு, கலையார்வம், இலட்சிய தாகம், விடாமுயற்சி வேகம், அடக்க வாழ்வு, காலத்தைப் பொன்னாக மதிக்கும் மாண்பு முதலாம் பலதுறைகளில் உயர்ந்த அதிபர் இவர் எனப் பலரும் பாராட்டக் கேட்டுள்ளேன், நேரிற் கண்டும் அனுபவித்துள்ளேன்.

சென்ற காலத்தை விளங்கி, நிகழ் காலத்தை அகழ்ந்து, எதிர்காலத்தை ஊடுருவிப் பார்த்து, எண்ணரும் இன்னல்கள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் உன்னதமான பணிபுரிந்து சாதனையாளராகத் திகழ்ந்த அதிபர், தமிழ் கத்தோலிக்க ஆசிரியகுலப் பெருமையை நிலைநாட்டியுள்ளார்

பிள்ளைகளின் உள்ளங்களில் இறையன்பும், சன்மார்க்க ஒழுக்கநெறிகளும், கலையறிவும் வளர்ச்சிபெற இதுகாறும் செய்த கல்விச் சேவைக்கு எல்லாம் வல்ல இறைவன் எல்லா நலனும் அருள்வாராக!

என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

+ தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர்.

## அறிவிப்பு

மணிவிழா நாயகரின் சேவைநலன்
பாராட்டு விழா நிகழ்வுகள்
14 - 07 - 99 (புதன்கிழமை) அன்று
காலை 9. 30 மணியளவில் எமது
வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்
என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

-- விழாக் குழுவினர்

## மணிவிழாக் கண்ட மாமனிதன்

மணிவிழாக் கண்ட எம் மாமனிதரான திரு சிங்கராயர் தார்சீசியஸ் அவர்களை இன்று அறுபதாவது அகவையில் வாழ்த்துவதில் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினராகிய நாம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம். இத்தகைய பெருமை உடைய மாமனிதர் அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவற்றில் அவர் தனக்கென ஒரு தனி இடத்தையும் மதிப்பையும் பெற்றிருந்தார். கடமையின்போது மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண் துஞ்சார் என்பதற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர். இத்தகைய சிறப்புப் பொருந்திய கல்விமான் என்றும் சிரித்த முகத்துடன் துள்ளித்திரியும் வெள்ளை முயற் குட்டி போன்று வாழ்ந்து கல்வி உலகுக்கும் சமூகத்துக்கும் தொண்டு ஆற்ற வேண்டும் என வாழ்த்திக்கூறி நிற்கும்...

பாடசாலைஅபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

## ஆசிரியர் கழகத்தின் வாழ்த்து

யாழ். புனித மரியாள் வித்தியாலயம் தனது 125 வருட நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிய சுவடுகள் சிறிதும் கலையாத இவ்வேளையில், பல்லாண்டு பலரும் போற்றக் கல்விப் புலத்தில் நற்பணி புரிந்து தமது அறுபதாம் வயதில் இளைப்பாறும் எமது ஏகோபித்த அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் திரு சிங்கராயர் தார்சீசியஸ் அவர்களை வாழ்த்தும் பெரும்பேறு கிடைத்தமையையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

— ஆசிரியர் கழகம்
யாழ்.புனித மரியாள் வித்தியாலயம்

## வித்தியாலய அதிபரின் வாழ்த்து

இன்று மணிவிழாக் காணும் எங்கள் வித்தியாலய அதிபரின் சேவை, சமூகத்தில், கல்வியுலகில் அவருக்கிருந்த உன்னத மதிப்பு என்பன பற்றி ஏற்கனவே அறிந்துள்ளேன்

எந்த ஒரு பாடசாலையிலும் காணப்பட முடியாத அன்னியோன்னியம், வாஞ்சை, அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிலவுகின்றதனைப் பார்க்கின்ற பொழுதும் அவர் அன்பினால் மாணவர்களை முன்னேற்றுவதனைக் கண்ட பொழுதும் பெரிதும் வியப்புற்றேன்.

உயர்ந்த கட்டடங்கள் பாடசாலையை இனங்காட்டி நிற்பதில்லை. தன்னலமற்ற உன்னத அதிபர்களாலேயே பாடசாலைகள் இமயமாக வானளாவுகின்றன என்பதற்கு எங்கள் மணிவிழா நாயகர் சான்றாகின்றார். மேலும் கூறின் இவர் ஒரு நடமாடும் முகாமைத்துவத்துக்கான பல்கலைக்கழகம் எனலாம்.

ம. செபஸ்ரியாம்பிள்ளை
அதிபர்

## பண்பும் செயற்றிறனும் மிக்க அதிபர்

திருமிகு சிங்கராயர் தார்சீசியஸ் அவர்கள் யாழ்க் கோட்டத்திலே அதி உன்னதமானஇடத்தைப் பிடித்துக்கொண்டவியத்தகு மனிதர். சொல்லும் செயலுமாய்நிமிர்ந்த நன் நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் அன்னைமரியாளின்அளப்பரியஅருட்கடாட்சத்துடன் புனித மரியாள் வித்தியாலயத்தை நனியினிதே நடத்திச்சென்ற கர்மவீரன்.

இளைப்பாற்றுக் காலத்தில் அன்னை மரியாள் அருட்துணை கொண்டு சமூகத்தில் கல்வி, சமூகம் எனப் பல்வகைப் பணியில் நீங்காது நிறைகவென வாழ்த்தி அமைகிறேன்.

கோ. சி. வேலாயுதம்.
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். கோட்டம்.

## கூ. சங்கத் தலைவர் வாழ்த்து

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும், சுமார் இருபத்தாறு , வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு. சி. தார்சீசியஸ் அவர்கள் எமது சங்கத்தின் இயக்குநராக 1997 ஏப்ரல் முதல் பணியாற்றிவருகிறார். அதிபர் பணியுடன் சமூகசேவையில் அவர் ஆர்வமுடன் ஈடுபடும் பல சேவைகளில் இதுவும் ஒன்றாகும். எந்தவொரு விடயத்தையும் கூர்மையாகவும், ஆழமாகவும் ஆராய்ந்து சங்கத்தின் வளர்ச்சி நோக்கிய அவரது ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவே இருந்துள்ளது.

உன்னதமான அதிபர்பணியை மக்கள் பாராட்டக் கூடியவகையில் நிறைவேற்றிய இவர் மகிழ்ச்சியான ஓய்வு காலத்தைப் பெறவும் சமூக சேவையில் தொடர்ந்து ஈடுபடவும் எமது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.

சி. வி, கந்தையா சிவஞானம்
தலைவர்
யாழ். ப. நோ. கூ. சங்கம்.

## உதைபந்தாட்ட லீக் வாழ்த்து

திரு. சி. தார்சீசியஸ் அவர்கள் தமது அதிபர் சேவையில் இருந்து இளைப்பாறுகின்ற இவ்வேளையில் அவரது சமூகசேவையையும், அயராத உழைப்பையும் பாராட்டுவதுடன் யாழ்ப்பாண உதைபந்தாட்டத்துக்கு அவர் ஆற்றிய சேவைகளையும் நினைவு கூருகின்றோம்.

தமது கிராம மக்களின் முன்னேற்றத்துக்காக உற்சாகத்துடன் உழைக்கும், இச் சமூகசேவையாளரது ஓய்வுகாலம் மகிழ்ச்சியானதாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

எஸ். [illegible]தன்,
தலைவர்,
யாழ். உதைபந்தாட்ட லீக்.

## இம் மணிவிழா சிறப்பு மலரினை வெளியிடுவதற்கு ஆதரவு நல்கியோர்

- குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்
- குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம்
- குருநகர் சனசமூக நிலையம்
- லாவண்யா கண், பல் சேவை
- த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்
- இ. ச. பேரம்பலம்
- ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ
- கு. கங்கைவேணியன்
- ஸ்ரீ அமலா நகைமாடம்
- ராஜா கிறீம் ஹவுஸ்
- கல்யாணி கிறீம் ஹவுஸ்
- லிங்கன் கிறீம் ஹவுஸ்
- றியோ கிறீம் ஹவுஸ்
- நாதன் வெல்டிங் வேக்ஸ்
- ராதை அழகுச்சோலை
- றிஸ்மி ஒலி, ஒளி அமைப்பாளர்
- எல். கெங்காதரன் (தொழிலதிபர்)
- றொலெக்ஸ் உணவகம்
- கு. செல்வராசா (ரட்ணா ஸ்ரோர்ஸ்)
- கணேசன் ஸ்ரோர்ஸ்
- சரஸ்வதி பவான்
- கௌரி அழகுமாடம்
- GOLDEN T. V. CENTER
- சிவலிங்கம் வைத்தியசாலை
- அன்னை அச்சகம்
- ரங்கன் பலசரக்குக் கடை
- விஜிதா கபே
- யாழ். ப. நோ. கூ. சங்கம்
- ரிப் டொப்ஸ் (TIP TOPS ICE - CREAM)
- குமார் ஏஜென்ட் அன்ட் கொமினிக்கேசன்
- M. தார்சீசியஸ் (கட்டட ஒப்பந்தகாரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Vespa Select ii ஸ்கூட்டர் (கோப்பிகலர்) விற்பனைக்கு உண்டு. தி. யோகரட்ணம், இல. 78, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.
[67090]

பூச்சி நீக்கப்பட்ட அல்சேசன் (ஜேர்மன் செப்பேட்) நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. 48, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(67118)

10 அடி நீளமுள்ள 10 Concrete தூண்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(67110)

Dachsand (Short) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 108/01, கன்னாதிட்டி, வீதி, யாழ்ப்பாணம்.
(67123)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி பெரியமாவடி உப்புக்கேணி வீதியில் கல்வீடு வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாதன் கூல்பார், சங்கத்தானை, சாவகச்சேரி.
(சி/8075)

சகல வசதிகளும் கொண்ட விசாலமான வீடு மாநகர சபை எல்லைக்குள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 63, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(67122)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[67151]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மிகநுட்பமான நிறுவை. அத்துடன் அடை முட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(66987)

## தவறிவிட்டது

ஜோஸ்ரெல்டா யேசுதாசன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஞானப்பிரகாசம் வீதி, மல்வம், உடுவில் சுன்னாகம், என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
[67107]

தில்லையம்பலம் அருளம்பலம் ஆகிய எனது விசேட அ. அட்டை பஸ்நிலையத்துக்கும் சிவன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 518, கே,கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.
[67148]

மட்டுவில் நாடு கிழக்கு அத்தாய் பூநகரியைச்சேர்ந்த பேரம்பலம் விமலராணி என்பவருடையதேசிய அடையாள அட்டை (இல.768211132V) திருநெல்வேலிப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்து உதவவும். (67121)

செல்வி கொன்சி யோசப் என்பவரது விசேட அடையாளஅட்டை,(0901005574) 25 – 6 – 99 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி யோ. யோசப்பின், 13/5, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(67133)

## விறபனைக்கு

சணல் ஆடுகள், வான்கோழி, கினிக்கோழி, மணித்தாரா, அறுபதுநாள் (60) பூர்த்தியான கறுப்புநிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகா வித்தியாலயத்துக்கு அருகில்.
(67142)

## பால் ஆடு விற்பனைக்கு

யமுனா பாறி ஆடு $1\frac{3}{4}$ மாதம் நிரம்பிய 2 கடாக் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. காலை $1\frac{1}{2}$+ மாலை 1 போத்தல் தினமும் — புதிய நேரப்படி காலை 8 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும் மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை.
(67146)

## தேவை

இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடிய விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(67111)

## திருமண சேவை

ஐரோப்பிய நாட்டில் வசிக்கும் தமிழ் மணமகளுக்கு மணமகன் தேவை. குறிப்பாக லண்டன், டென்மார்க், பிரான்ஸ் நாடுகளில் வசிக்கும் மணமகனுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தகுதியுடையோர் குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். P. T. P. திருமண ஏஜென்ட், யாழ் வீதி, மானிப்பாய்
(67096)

## மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதும் கேட்டை நட்சத்திரமும் உடைய டென்மார்க்கில் வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த, அழகுள்ள மணமகள் தேவை. சாதகம், படப் பிரதிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதி திருமண சேவை, மணல்வளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
(67108)

## வியாழ, சனி மாற்றம்

ஜூன் 2000 வரை உஙகளுக்கு எப்படி? எங்கும் விற்பனையாகின்றன. புடைவைக்கடைக்குரிய கண்ணாடி அலுமாரி, 8'X12' விற்பனைக்குண்டு. ''சத்யா'' BLG தொலைபேசியருகே 3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
(67139)

## T.V கள் விற்பனைக்கு

2030, 2060, 20 ₒ2 மற்றும் 27'' Sony, National ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிவானவிலையில்) எஸ். சதாகரன், மூளாய் றோட், மத்தியூஸ் லேன், சுண்டுக்குளி.
(66978)

## FOR SALE

Quality C D Video English Film (Holywood) For Sale Video Euglish Copies Also For Sale 154, Kannathiddy Road, Jaffna.
(67116)


# St. Patrick's College
## SPECIAL MEETING
## for
## Old Boys

2000 ஆம் ஆண்டில் எமது கல்லூரி தனது சேவையின் 150 ஆவது ஆண்டை நிறைவு செய்வதால் அது தொடர்பான சிறப்பு நிகழ்வுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக 11—07—99 ஞாயிறு காலை 10.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும் விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் கேட்கப்படுகின்றனர்.

அருட்திரு. A. I. பேணாட்
கல்லூரி அதிபர்,
ப. மா. ச. தலைவர்.

(67144)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | நிறைவு |
|---|---|---|
| 22 |  | 29 |
| — | | — |
| 11 | | 06 |
| — | | — |
| 1938 | | 1994 |

அமரர்
## இராமுப்பிள்ளை இராமச்சந்திரன்
(ELECTRICAL FOREMAN)

திதி: 04—07—1999

தெய்வமென வாழ்ந்தெம்மைச் சிறப்புடனே
வாழவைத்தாய்
உய்ய வழிகாட்டி உயர்வித்தாய் எம் குடும்பம்
பொய்யாமல் அன்பு மழைபொழிந்தாயே எந்நாளும்
ஐய! நீ மறைந்தாலும் அழியாது உன் நினைவு!

என்றும் உங்களை மறவாத
மனைவி, மக்கள், உறவினர்கள்.

359/34A, கோயில் வீதி,
நல்லூர்.
(67134)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 03 |  | 05 |
| — | | — |
| 08 | | 06 |
| — | | — |
| 1925 | | 1999 |

## அமரர் சூசைப்பிள்ளை செபமாலை
[ஓய்வு பெற்ற மதுபான பரிசோதகர்]
[Excise Inspector]

பாசமனதை எம்மீது பொழிந்து நின்றபெரியப்பா!
நேசமுடன்
எம் நெஞ்சில் வாழ்ந்த பெரியப்பா! — ஈசன் தான்
ஜெபத்தினை ஏற்றி நின்ற பெரியப்பா!


உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நாளை [05. 07. 99] திங்கட்கிழமை காலை நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் அன்னாரின் இரங்கற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சகோதரி ராசம் [கொழும்பு],
விஜயா [கார்மேல் சபை–கொழும்பு],
அ. அஞ்சலாதேவி [மானிப்பாய்],
மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மச்சாள்மார், மச்சான்மார், பெறாமக்கள்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.
[67063]

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்
## முதலாம் ஆண்டு 15 ஆம் ஆண்டு





| அமரர் | திருமதி |
|---|---|
| **தம்பர் விசுவலிங்கம்** | **விசுவலிங்கம் அன்னபூரணி** |
| மண்ணகம்: 27 - 12 – 1906 / விண்ணகம்: 17 - 05 – 1998 | மண்ணகம்: 03 – 07 – 1914 / விண்ணகம்: 25 – 06 – 1984 |
| திதி: பூர்வபக்க ஷஷ்டி 5–6–99 | திதி: பூர்வபக்க ஏகாதசி 9–7–99 |

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடனும் சிறந்த பண்புகளுடனும் வாழ்ந்து நம்மை நல்வாழ்வு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.
[67145]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



மண்ணின் முத்தாக 19 — 02 — 1929

விண்ணின் சொத்தாக 04 — 07 — 1994

## திருமதி அனா ஞானமணி நரசிங்கம் (ஞானம்)

''இவ்வுலகில் எனது பயணத்தை முடித்து இறைவனில் அமைதி பெறுகிறேன்.''

இவரின் இளைப்பாற்றிற்காக இறைவனை மன்றாடுங்கள்.

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
மு. நரசிங்கம்
உடுப்பிட்டி வீதி,
மாலிசந்தி,
வதிரி, கரவெட்டி.

(67119)


## மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் திருக்கை மீன் ஒன்றைப் பிடிக்கமுயன்ற சமயம் அது வாலால் அடித்ததில் காயமடைந்தார்.

யாழ். கடலேரியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகரைச்சேர்ந்த எஸ் சந்திரசேகரம் [வயது 29] என்பவரே காயமடைந்தார் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)


## மலிவு விற்பனை

சோனி, பனசோனிக், நஷனல் 14'' 21'', கலர், கறுப்பு வெள்ளை ரீ வீக்கள், வீடியோ டெக்குகள், KOBE பூஸ்டர்கள், UHF, VHF அன்ரனாக்கள், றேடியோ, கசட் றேடியோ செற்றுக்கள் அசற்கான உதிரிப்பாகங்கள், சுவர் மணிக்கூடுகள், சீக்கோ, கசியோ, சிற்றிசன் கைக்கடிகாரங்கள் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

### நியூ சிற்றி றேடேர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(67117)




NIPPON EL - 2u MODEL
5 W = 25 W
7 W = 35 W
9 W = 40 W
11 W = 60 W
13 W = 75 W
15 W = 80 W

NIPPON EL - 3u MODEL
15 W = 80 W
18 W = 85 W
20 W = 100 W
24 W = 120 W

NIPPON ESL MODEL
9 W = 40 W
11 W = 60 W
13 W = 60 W
18 W = 85 W

கலர் பல்ப்புகளும் உண்டு

## நிப்போன் தயாரிப்புகள்

உங்களுடைய பணத்தினை பெறுமதியாக்குங்கள்

குறைந்த விலைகளில், கூடிய வகைகளில்

## நிப்போன்

மின் சக்தியை சேமிக்கும் பல்ப்புகள்

COMPACT SIZE

மின்சக்தியின் அடிப்படையில் பணத்தினை சேமியுங்கள் அத்துடன் விலையின் அடிப்படையில் அது சிறந்தது

12 மாதங்கள் உத்தரவாதமுடையது 12 மாதங்களுக்கிடையில் பல்ப்புகளை இலவசமாக பழுதுபார்க்கப்படும்

NIPPON ENERGY SAVING BULBS ARE NOW REPAIRABLE

24 Hours a day will cost you only =/86 cts, SAVE 80%

SPECIAL DISCOUNTS FOR PURCHASES OF 50 BULBS OR MORE

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel : 589992

Insist on "NIPPON" Guarantee Card

AVAILABLE ISLANDWIDE

"NIPPON" The Guaranteed Product

NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER

(சி/7902)





# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

## நாடக அரங்கு

1999 - 07 - 04 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து

தொடக்கவுரை

திருமதி ஆர், பரராஜசிங்கம்
நூலகர், யாழ் பல்கலைக்கழகம்

வாழ்த்துரை

திரு. சு. ஸ்ரீபாஸ்கரன்
பேரவை உறுப்பினர்

நாடக அரங்கு காலை 9-30

**காத்தவராயன்**

தயாரிப்பு
திரு. பொ. அருந்தவநாதன்
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்

நாடக அரங்கு மாலை 2-30 — 4-30

**கோவலன் - கண்ணகி**
வளர்பிறை நாடக மன்றம், பாஷையூர்

**ஜீவப்பிரயத்தனம்**
திருமறைக் கலாமன்றம்

பிரவேசம் இலவசம்

ஆர்வலர் அனைவரும் வருக (சி/8054)



## எமது ஸ்தாபனம்

## 49 ஆவது ஆண்டை நோக்கி முன்னேறும் நன்னாளில்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பிலிப்ஸ் மின்குமிழ்களுக்கு [Philips Bulb] வடமாகாண விநியோகஸ்தர்களாக நாம் நியமனம் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

25W, 40W, 60W, 75W, 100W ஒரே விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

★ சகல விதமான மின் பாவனைப் பொருள்களுக்கும், மின் நீர்இறைக்கும் பம்புகள், (Electric Motors) எஸ்லோன் பைப் வகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

### நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T. P. — 2037

(67126)



ஓம் முருகா! ஓம் முருகா!! ஓம் முருகா!!!



## கடந்த 32 ஆண்டுகளுக்கு மேல் தெய்வீக வழிபாட்டுக்குத் துணைபுரியும்



# காவடி மார்க் கற்பூரம்

## யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

விநியோகஸ்தர்கள்:

PRABA TRADING Co.
31, GABOS LANE,
COLOMBO - 11

Tel. 329426 Fax. 422750

## நின்று நிலைக்கும் ஜோதிமயம் காவடி மார்க் கற்பூரம் என்றும் தரும்!

(சி/8037)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டை இலிகிதர் தேவை

வயது 35- க்கு மேற்பட்ட அனுபவமுள்ள ஆண்கள் 10-07-99 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**பகலோன் களஞ்சியம்**
334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (67112)

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

அச்செழு கிராம அபிவிருத்திச்சங்க வளர்ச்சிக்காக நீர்வேலி முற்றவெளி மைதானத்தில்

11-07-1999 ஞாயிறு பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ள மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

நிர்வாகிகள்
கிராம அபிவிருத்திச் சங்கம்
அச்செழு
(67125)

# கண்ணீர் அஞ்சலி

சமூகசேவையாளனும், கலை ஆர்வலருமான
வைத்திய கலாநிதி
**பொ. சொர்ணலிங்கம்**
M B B S (Cey), L. R. C. P. [Lond] M. R. C. S. [Eng] M. R. C. P. (U.K)

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது கழகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர் எமது கழகத்திற்கு அன்பளிப்புச் செய்த ஆர்மோனியத்தின் இசையில் என்றும் எம்முடன் வாழ்ந்திருப்பார், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்.
(67113)

# 31- ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 | 04 |
| 07 | 06 |
| 1913 | 1999 |



திருமதி
**மரியம்மா யேம்ஸ்**

தாயே எம்மை மறவாதே
அன்புக்கோர் முது சொத்தே ஆணிமுத்தே
அழகினுக்கோர் பூங்கொத்தே அம்மா தாயே!
துன்ப நிழல் அணுகாதே எம்மைக் காத்த
தூண்டாத மணிவிளக்கே அணைந்திட்டாயே!
பொன் புதையல் இழந்தோமே பாசம் தோய்ந்த
புனித முகம் காணாதே புலம்புகின்றோம்
இன்பமெல்லாம் குவிந்த பரலோக வாழ்வின்
இனிமையிலே எமை என்றும் மறந்திடாதே!
அமுதூட்டித் தாலாட்டி எமையெல்லாம் ஆளாக்கி
தரணியிலே தலைநிமிர வைத்தவளே! எமை விட்டு
நீ பிரிந்து திங்கள் ஒன்று கடந்ததோ!
ஆறாது எம் துயரம்.

04 - 06 - 1999 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தாயாரின் இறுதி நிகழ்வுகளில் பங்கு கொண்ட குருமார், கன்னியர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் நேரிலும், தந்தி மூலமும் அநுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகள் நீற்றம்மா பிளஸம்
ஆதர் மற்றும் பிள்ளைகள்.

2 / 2 மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (67114

## இரு இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4
சட்டத்துக்கு முரணான வகையில் கூரிய ஆயுதங்களை வைத்திருந்ததாகத் தெரிவித்து இரு இளைஞர்கள் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காட்டைச்சேர்ந்த எஸ். ரவீந்திரநாதன், எஸ். சிவலோகநாதன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-5)

## மெய்வன்மை போட்டிகள்

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனிஆண்டவர் ஆலய ஆதரவுடன் நடத்தப்படும் புவேந்தன் மழலைகள் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை. இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க. தர்மராசாவும் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் வ சின்னப்பு, லயன்ஸ்கழக பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் சு.சி. அருளானந்தம் ஆகியோர் கலந்துகொள்வர்.

அறிமுகப்படுத்துகிறோம் போரோ சொப்ட்

இது பருக்களினால் ஏற்பட்ட காயங்கள், தழும்புகள் என்பவற்றை அகற்றுகிறது. இதன் சிறப்பு ஆன்ட்டிசெப்ரிக் தன்மை (ANTISEPTIC FORMULA) முகத்தில் பருக்கள் வரவிடாமல் தடுக்கிறது இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் முகத்தை வெண்மையாக்கி பொலிவடையச் செய்கிறது.

போரோ சொப்ட்
பிசுபிசுப்பற்றது. கற்றாழைச்சாறு கலந்தது.




யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்.
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8056)

# கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகநலத்துறை, நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

1. மேற்படி அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் திருகோணமலை வடக்கு — கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில், மகளிர் விவகார அமைச்சு கேள்விச்சபைத் தலைவரினால் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் இவ்வமைச்சில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள தரங்களிலும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர், நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரங்களைச் சம்பந்தப்பட்ட நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் 4. 45 மணிவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணம் | இக்ராட்டில் பதிவு செய்யப் பட்ட தரம் | கேள்விப் பத்திரம் வழங்கும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. மட்டக்களப்பு சுகாதார வைத்தியஅதிகாரியின் அலுவலகம் நிர்மாணித்தல், கட்டம்—III | 2000/- | 250/- | எம் — 9 | மட்டக்களப்பு நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகம். |
| 2. திருகோணமலை சுகாதார அமைச்சிற்கு கராஜும்பதவி நிலை உத்தியோகத்தர் விடுதியும் நிர்மாணித்தல், கட்டம்—III | 3000/- | 750/- | எம் — 7 | திருகோணமலை நிர்மாணத் துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகம். |
| 3. யாழ்ப்பாணம் கைதடி அரச சிறுவர் இல்லம் நிர்மாணித்தல் கட்டம் — I | 2500/- | 750/- | எம் — 8 | யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகம். |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு, ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை சம்பந்தப்பட்ட நிர்மாணத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4.45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். விநாயகலிங்கம்,
தலைவர்,
அமைச்சு கேள்விச் சபை,

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை,
நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள், கைத்தொழில்,
மகளிர் விவகார அமைச்சு,
உள்துறைமுக வீதி,
திருகோணமலை.
30-06-1999 (சி/8071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நுகர்ச்சிக் கூ. சங்கங்கள் மேலும் சில இடங்களில் நிறுவப்படும்

அரியாலை, ஜூலை 4

யாழ். மாவட்டத்தில் விவசாய உற்பத்தி நுகர்ச்சிச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே உரும்பிராய், ஊரெழு பகுதிகளை உள்ளடக்கிய விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவு சேவைச் சங்கம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றியளித்திருப்பதாக மாவட்ட கூட்டுறவுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச் சேவைச் சங்கத்தை மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்குமாறு பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து கோப்பாய், இருபாலை, இணுவில், தாவடி ஆகிய பிரதேசங்களில் இந்தச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## நன்னிரவு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த மன நோயாளி

நெல்லியடி, ஜூலை 4

வைத்தியசாலை வளவுக்குள் புகுந்த மனநோயாளியான பெண் ஒருவர் வார்ட் ஒன்றுக்குள் சென்றுநோயாளிகளையும், தாதிகளையும் தாக்க முற்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 12.30 மணியளவில் மந்திகை மருத்துவமனையில் இடம்பெற்றது.

மந்திகை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த இளம் யுவதியான இந்த மன நோயாளி வார்ட்டுக்குள் புகுந்து அட்டகாசம் செய்ததினால் உறக்கத்திலிருந்த பெண் நோயாளிகள் திடீரென கண் விழித்து கூச்சலிட்டனர்.

தாதிகளும், ஊழியர்களும் அந்தப் பெண்ணை விரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த போதும் அது பலனளிக்கவில்லை.

உடனடியாக இது குறித்து வெளிநோயாளர் பிரிவில் கடமையிலிருந்த டாக்டருக்கு தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண் ஒருவாறு பிடிக்கப்பட்டு அதே வைத்தியசாலையில் மன நோயாளர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார். (இ-109)


## ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் ஓராம் மாத நினைவஞ்சலியும்

### மாணிக்கம் வினாசித்தம்பி

(கரம்பகம்)

கரம்பகம் அ. த. க. பாடசாலை ஸ்தாபகரும், கரம்பகம் வீரபத்திரர் ஆலயத் தர்மகர்த்தாவும், பூசகருமான

மாணிக்கம் வினாசித்தம்பி

72 ஆவது வயதில் 03—06—99 வியாழக்கிழமை வன்னியில் காலமானார்.

அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அன்னதானமும் கரம்பகம் வீரபத்திரர் ஆலயத்தில் 05—07—99 திங்கட்கிழமை நடைபெறும். அனுதாபிகள் யாவரையும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு ஊர்மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

தகவல்

செ. க. துரைரத்தினம்

அதிபர்

கரம்பகம்,
மிருசுவில்.

[67162]



## மரண அறிவித்தல்

### திருமதி தில்லைநாதன் வேலாசிப்பிள்ளை

கோந்திரம்பற்றை தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தில்லைநாதன் வேலாசிப்பிள்ளை 02-07-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதனின் (S.P.H.I.) அன்பு மனைவியும், செல்வராணி, இராசநாதன் (ஒப்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்), விஜயநாதன் (உதவி தபாலதிபர், சங்கானை), யோகராணி, சௌந்தராணி, குணநாதன் (ஜேர்மனி), சிவநாதன் (சுவிஸ்), தங்கநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜீவகடாச்சம் (R. M. P) மாலினிதேவி, இராசலஷ்சுமி, சுந்தரலிங்கம் (J. P இளைப்பாறிய நீதிமன்ற பதிவாளர்), அருந்தவராசா (பிரதம எழுது வினைஞர் R. D A. யாழ்ப்பாணம்), அமுததேவி (ஜேர்மனி), புஷ்பவதி (சுவிஸ்), வசந்தமலர் (கனடா) ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்ற ஜீவராணி காலஞ்சென்ற ரவீந்திரன், சந்திரராணி (கனடா), கஜேந்திரன் (ஹொலண்ட்), நிமலன் (பொறியியல் மாணவர் பேராதனை), சிவராஜ் (ஆஸ்திரேலியா), தயாளன், தில்லைநாதன் (கணனி பொறியியலாளர் I. I. S யாழ்ப்பாணம்), விஜயா (பலாலி ஆசிரிய கலாசாலை), அஜந்தன், சிந்துஜன், சுபாசினி, பிரதீபன் (ஜேர்மனி), தர்மிலன் (ஜேர்மனி), திவ்யா (ஜேர்மனி), அஸ்வினி (சுவிஸ்), சுஜீவ் (கனடா), டிலிசன் (கனடா), பிரவீன் [கனடா], சிவராமலிங்கம், கிறிஸ்தோபர், ஜீவன், மரியதாஸ் [கனடா], Dr. விஜயலஷ்சுமி [Mcleod Hospital Inuvil], ஜெயசீலன் [பொறியியல் மாணவன் மொறட்டுவ] ஆகியோரின் பேர்த்தியும், சிவகடாட்சம், நவநீதன், சாமினி [கனடா], சர்மிளா [கனடா], பிரார்த்தனா, அக்ஷை ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [03-07-99] சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:

தி. விஜயநாதன்

[மகன்]

தும்பளை,
பருத்தித்துறை.

[67173]


## யாழ். மாணவர்கள் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அகில இலங்கை ரீதியாக நேற்று கொழும்பில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் மூன்று நிகழ்ச்சிகளில் யாழ். மாணவர்கள் முதலிடம் பெற்றிருக்கிறார்கள்.

கவிதையாக்கம் 4 ஆம் பிரிவில் தி. கோபிநாத் (யாழ். இந்துக் கல்லூரி), 5 ஆம் பிரிவில் த. தர்மேந்திரா (யாழ். இந்துக்கல்லூரி), கட்டுரை ஆக்கம் 2 ஆம் பிரிவில் பிரியங்கா சத்தியசீலன் (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரே முதலிடம்பெற்றனர்.

இவர்களில் கோபியும் தர்மேந்திராவும் 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளில் கட்டுரை, கவிதைகள் எழுதி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தினப் போட்டிகளில் தொகுதி ஒன்றில் எழுத்துச் சம்பந்தமான விவாதம் நேற்று முடிவடைந்தது.

தொகுதி இரண்டு எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

அதில் இசை, நடனம், வில்லுப்பாட்டு, இலக்கிய நாடகம் ஆகியவை இடம்பெறும்.

## சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி தேவாலயத்தில் இருதயநாதர் பெருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும்.

அன்றைய தினம் பக்திச் சபைகளுக்கிடையேயான ஒன்று கூடல் நிகழ்வும் திரு இருதயசபையினரால் நடத்தப்படும். (க-9)

★ ★ ★

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-109)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி, வீரபத்திரர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் விசேட சங்காபிஷேகமும், மாலை உற்சவமூர்த்தி நகர் உலாவும் இடம்பெறும். (இ-117)

★ ★ ★

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலய சங்காபிஷேகம் நாளை திங்கள் காலை முதல் நடைபெறும். (இ-117)

★ ★ ★

பளை தம்பகாமம் தெணியாய் அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும்செவ்வாய்க்கிழமை காலை முதல் நடைபெறும். (இ-117)

# செஞ்சிலுவை ஊழியருக்கு புதிய அடையாள அட்டை

## மோசடியை அடுத்து நடவடிக்கை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் ஊழியர்கள் ஆகியோருக்கான தற்போதைய அலுவலக அடையாள அட்டைகளை மாற்றி புதிய அடையாள அட்டைகளைவழங்குவதற்குஇலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய அடையாள அட்டைகளில் மோசடி செய்வது இலகுவாக இருக்கின்றது என்றும்—

இவ்வாறு அடையாள அட்டைகளில் மோசடிசெய்து அவற்றைப் பயன்படுத்தி வந்த 7 பேரை நுவரெலியாப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்றும்—

இதனை அடுத்தே மோசடி செய்யமுடியாத வகையிலான புதிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்—

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6-21)

## பெரும் எண்ணி......

(மூன்றாம் பக்கத் தொடர்)

'ரணகோஷ' வுக்கு உண்டு. அதாவது இராணுவம் முன்னேறிக் கைப்பற்றிய பகுதிகளில் பெருந்தொகையான நிலப்பரப்புகளுடன் பெருந்தொகையான மக்களையும் கைப்பற்றிய பெருமை ரணகோஷவிற்கே உண்டு. இவ்வாறு ராணுவக் கட்டுப்பாட்டிற்குள் சென்ற மக்கள் பிரச்சினையில்லாமல் வாழ்வதைக் கண்டுவிட்டு விடத்தல்தீவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்களும் ராணுவம் வந்தாலும் பரவாயில்லை நாம் எங்கேயும் இடம்பெயர்வதில்லை என்ற எண்ணத்துடன் இருந்தனர். ஆனால் திடீரென மோதல் மூண்டதும் என்ன செய்வதெனத் தெரியாமல் போட்டது போட்டபடியே விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

இவ்வாறு கட்டாடிவயல், கோவில் குளம், கள்ளியடி ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய ஆயிரமாயிரம் மக்கள் பாலியாறு, மூன்றாம் பிட்டி, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி மரங்களின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இதேவேளை விடத்தல்தீவுப் பகுதியில் வீழ்ந்த ஷெல்களால் பயந்து போன மக்கள் அங்குள்ள இரண்டு தேவாலயங்களில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவர்கள் வழமைபாக பள்ளமடுப்பகுதிக்குச் சென்றுதான் குடி தண்ணீரை எடுத்து வருவது வழக்கம். ஏனென்றால் கடற்கரையோரமாகவுள்ள விடத்தல் தீவுப் பகுதியில் நீர் உப்பு நிறைந்ததாகவே இருக்கும் ஆனால் இப்போது அவர்கள் தண்ணீருக்கு பள்ளமடுவிற்குப் போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்குள்ள ஆலயங்களில் தங்கியுள்ள மக்கள் உணவு, தங்குமிட வசதி என்பனவற்றுடன் குடி தண்ணீர் பிரச்சினையையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

அடுத்து இந்த 'ரணகோஷ' நடவடிக்கையால் வன்னிக்கான போக்குவரத்தும் ஸ்தம்பித்துப் போய்விட்டது என்பதைவிட இனிமேல் பழைய போக்குவரத்துப் பாதையான உயிலங்குளம், பள்ளமடுப் பாதையையும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் தற்போதைய மேற்கு நோக்கிய முன்னேற்றமும், அது பூர்த்தியடைந்ததும் பூநகரியை நோக்கி முன்னெடுக்கப்படப்போகும் வடக்கு நோக்கிய நகர்வுக்கும் இந்தப் பாதையானது இடைஞ்சலாக இருப்பதால் இனிமேல் புதிய பாதை ஒன்றைப் பார்த்துக் கொண்டு போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதற்காக பூவரசங்குளம், இரணை இலுப்பைக்குளம், மூன்றுமுறிப்பு ஊடான ஒரு பாதையும், கண்டிவீதி மாங்குளம், மல்லாவி ஊடாக ஒரு பாதையும் ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஊடாக ஒரு பாதையும் வவுனியா அரசாங்க அதிபரால் சிபாரிசு செய்யப்பட்டன. இந்த மூன்றில் ஏதாவதுஒரு பாதையை திறக்க தாம் சம்மதிப்பதாக வன்னிப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல அறிவித்தார். அதன்படி செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகொள்ளப்பட்டது. அதில் கண்டி வீதி ஊடான மாங்குளம் — மல்லாவிப் பாதையைத் திறக்கலாம் என புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி பேச்சு நடந்து வருகிறது.

இதன்படி பயணிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களும் வவுனியாவில் வைத்துச் சோதனையிடப்பட்ட பின் இராணுவப் பாதுகாப்புடன் மாங்குளம் வரை கொண்டு செல்லப்பட்டு முன்னரங்க நிலையில் விடப்படும். அதே போல் அங்கிருந்து வரும் பயணிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களும் இராணுவப் பாதுகாப்புடன் அழைத்து வரப்படும். உணவு லொறிகளின் விடயத்தில் வவுனியாவில் இருந்து செல்லும் உணவு லொறிகள் மாங்குளத்தில் பொருள்களை இறக்கி விட்டு வர வன்னியிலிருந்து வரும் லொறிகள் அங்கு வைத்து பொருள்களை மாற்றி ஏற்றிச் செல்லக்கூடியதாகதிட்டங்கள் வகுக்கப்பட்டு படையினருடனும், புலிகளுடனும் பேச்சுக்கள்நடைபெற்று வருகின்றன.

இந்தப் போக்குவரத்துத் தடையால் வன்னியில் வசிக்கும் சுமார் லட்சத்து 50 ஆயிரம் பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். கடந்த மார்ச் மாதத்தில் 'ரணகோஷ' நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் அங்கு மாதாந்தம் அனுப்பப்பட வேண்டிய உணவு லொறிகள் ஒழுங்காக அனுப்பப்படவில்லை. தொடர்ந்து ஏப்ரல், மே, ஜூன் மாதத்திற்கான உணவு விநியோகம் நடைபெறவில்லை. கிட்டத்தட்ட ஆயிரத்து இருநூறு லொறி உணவுப் பொருள்கள் இதுவரை சென்றிருக்கவேண்டிய இடத்தில் இதுவரை 160 லொறி உணவுப்பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன. இதனால் உணவுப்பொருள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு என்பன ஏற்பட்டுள்ளன. கடிதப் போக்குவரத்தும், பயணிகள் போக்குவரத்தும் இன்றி தொடர்புகள் துண்டிக்கப்பட்டுப் போய்விட்டன. கடுமையாக நோய்வாய்ப்பட்ட நோயாளர்களை தென்பகுதிக்கு எடுத்து வர முடியாததால் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தொடர்ந்து இராணுவம் அந்தப் பகுதிகளில் முன்னேற முனைப்பாக நிற்கிறது. நிறுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படப் போகின்றது. அது முன்னேறி பள்ளமடுவையோ, விடத்தல் தீவையோ பிடித்தால் அந்த இராணுவ நடவடிக்கைக்கு 'ரணகோஷ 5' என்று அறிவிக்கப்படும். இல்லாமல் முன்னேற்ற முயற்சிகள் தடைப்பட்டால் 'ரணகோஷ' 4 இன் 3 ஆம் பகுதி என்று அறிவிக்கப்படலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. தூதரகத்தினால் மேலும் 13 திட்டங்கள் அமுல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் 13 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

இந்த திட்டங்களுக்கென 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களின் விவரம் வருமாறு:-

அம்பன் ஆஸ்பத்திரி திருத்தம், மந்திகை, புலோலி விவசாயிகள் கடனுதவி, புலோலி வடமேற்கு விவசாயிகள் கடனுதவி, வல்வை சிவகுரு வித்தியாலயம் திருத்தம், குடமியன் அ. த. க. பாடசாலை புதிய கட்டடம், மிருசுவில் வடக்கு அ. த. க. பாடசாலை கட்டடம், மறவன்புலவு, கைதடி சலவைத் தொழிலாளர்கள் இளைப்பாறு மண்டபம், மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான சுய தொழில் கடனுதவி, சங்கானையில்பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கான தொழில் பயிற்சி, கரணவாய் நெல்லியடி கிழக்கு விவசாயிகளுக்கு கடனுதவி.

கட்டைவேலி யாக்கரு வீதி திருத்தம்

கம்பர்மலை அ. த. க. பாடசாலை புனரமைப்பு, புதுமடம் றோ. க. பாடசாலை புனரமைப்பு.

மேற்குறிப்பிட்ட திட்டங்களையும் சேர்த்து இதுவரையும் 31 திட்டங்கள் ஐ. நா. தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தவுள்ளன. (இ-5)

## விவரம் தெரியுமா?

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் சிங்கப்பூருக்கு தொழில் செய்யச் சென்று இப்போது கஷ்டப்படுகிறார்.

அவருக்கு உதவ வேண்டும் என்ற நன்னோக்கத்துடன் அவருடன்கூட இருக்கும் இன்னொரு தமிழ்ப் பெண் முயற்சி செய்கிறார். கஷ்டப்படும் பெண்ணின் தாய், தந்தையர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள் ! என்பதனை அறியவிரும்பி இங்குள்ள ஒருவருடன் கடித மூலம் தொடர்பு கொண்டு விவரம் கேட்டுள்ளார்.

ஆனால் அவரால் அதனை அறியமுடியாமல் உள்ளதால் உதயன் வாசகர்களின் உதவியை நாடுகிறார்.

சிநேகிதி எழுதிய கடிதத்தின் பிரகாரம்—

சாந்தி என்ற பெண் சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னரே சிங்கப்பூர் சென்றார். அவருக்குப் பேசும் சக்தி இல்லை. எழுதவும் தெரியவில்லை. சில குறிப்புகளை மட்டும் சைகை மூலம் தெரிவித்திருக்கிறார்.

பலாலி இராணுவ முகாமுக்குச் சமீபமாக உள்ள கிராமம் ஒன்றில் சிறிய வீட்டில் வாழ்ந்தார் என்பதும்—

குடாநாட்டில் உண்டான அரசியல் பிரச்சினைகளால் கொழும்பு சென்று சிலரின் உதவியுடன் சிங்கப்பூர் வந்தார் என்றும்—

தந்தையார் தபாற் திணைக்கள ஊழியர் என்றும் அவரின் பெயர் விநாயகமூர்த்தி என்றும், தாயார் பெயர் காமாட்சியம்மாள் என்றும்— அந்தப் பெண் கூறும் குறிப்புகளில் இருந்தும் வைத்திருக்கும் தஸ்தாவேஜுகளில் இருந்தும்— தெரிய வந்திருப்பதாக சிநேகிதி எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும் பெண்ணின் உறவினர்கள் எவரும் விவரம் தெரிந்தால் உதயன் அலுவலகத்தில் வந்து தெரிவிக்கலாம். நீங்கள் செய்யும் மனிதாபிமான உதவியாக அமையும். (அ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4

வலி. தெற்கு சன சமூக நிலையங்களின் சமாசமும் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் கிராமிய அபிவிருத்திக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை 8 30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

ஆளுமை விருத்தி, கணக்கு வைப்பு நடைமுறைகளும், ஏடுகள் பராமரித்தலும், தலைமைத்துவம் ஆகிய தலைப்புக்களில் கருத்தரங்கு நடைபெறும். [இ-ரி]

## இன்று

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கலைவாணி திருவுருவத் திறப்புவிழா இன்று ஞாயிறு காலை 9.00மணிக்கு அதிபர் கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் நிறுவுநர்நினைவு தினமும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளும் இடம்பெறும். (இ-90)

## 90 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இழப்புக்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டு மக்கள் இதனால் மேலும் பாதிக்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தைக் குறைக்கும் உத்தரவைக் கடந்த ஆண்டு ஜூலையில் அரசு வெளியிட்டதும்—

அரசின் அந்த முடிவுக்கு எதிராக அச்சமயம் தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் கடும் கண்டனக் குரல் எழுப்பியதை அடுத்து ஜனாதிபதி அந்த உத்தரவை வாபஸ் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அரசின் தற்போதைய உத்தரவு தொடர்பாக கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அரச உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-6)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு நடைபெறும்.

இதில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ இறுதி ஆட்டம் — குருநகர் பாடும்மீன் வி. க. அணி எதிர் ஊரெழு றோமஸ் வி. க. அணி.

★ காட்சிப்போட்டி — ஆதிசக்தி வி. க. அணி எதிர் கழுகுகள் வி. க. அணி. (க)

## றெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

துப்பாக்கியுடன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வேப்பங்குளம் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட மூக்கன் உதயகுமார் என்பவரின் மரணவிசாரணை நேற்று வவுனியாவில் நடைபெற்றது

இந்த விசாரணையின் போது சம்பந்தப்பட்ட றெலோ உறுப்பினரை இறந்தவரின் உறவினர் அடையாளம் காட்டியதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

றெலோ அமைப்பைச் சேர்ந்த எஸ். செல்வம் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். (இ-5-164)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

மாங்குளம் பகுதியில் வைத்து லொறிகளிலிருந்து பொருள்களை மாற்றும் பகுதி மற்றும் பொதுமக்கள் மாங்குளத்துக்கு உள்ளேயும், வெளியேயும் செல்லும் பாதைகள் ஆகியவற்றை இவர்கள் நேரில் பார்வையிட்டனர்.

'' நீண்ட நாள்களாக வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படாததினால் அங்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே விரைவாக இந்தப் பாதையைத் திறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் '' என்று வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் கட்டுப்பாடு அற்ற பிரதேசத்துக்கும் இடையில் பொதுமக்களின் போக்குவரத்துக்காக மாங்குளம் மல்லாவி ஊடாகப் பாதை ஒன்றைத்திறப்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதையடுத்தே இந்தப் பாதை திறப்பு நடவடிக்கை இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5-164)

## ஜனாதிபதி ஆட்சி முறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

### 15 ஆம் திகதி முதல் ஜே. வி. பி. நடத்தும்

கொழும்பு, ஜூலை 4

நிறைவேற்று அதிகாரமுடைய தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும்படி கோரி ஜே. வி. பி. நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்த முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இந்த எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகும் என்றும் — காலி, மாத்தறை ஆகிய இடங்களில் முதலாவது ஆர்ப்பாட்டத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகியவை இந்தப் போராட்டத்தின்போது ஜே. வி. பிக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளன. (ஐ)

## கசிப்புஉற்பத்தி, விற்பனை 6 பேருக்கு தண்டப் பணம்

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட ஆறு பேருக்கு மொத்தம் 37 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ. த. விக்கினராஜா உத்தரவிட்டார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக கூறப்படும் தேவதாஸ் அரியரத்தினம் என்பவரது வீட்டிலிருந்து பல கசிப்பு பரல்கள் பொலீஸாரினால் மீட்கப்பட்டன.

இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது 15 ஆயிரம் தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், கசிப்பு விற்பனை சம்பந்தமான கைது செய்யப்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம்பிள்ளை சிவலிங்கத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், சுப்பிளானைச் சேர்ந்த செல்வராசா கணபதிப்பிள்ளைக்கு 5 ஆயிரம் ரூபாவும், ஏழாலையைச் சேர்ந்த கணேஸ் அழகுக்கு 5 ஆயிரம் ரூபாவும், ஏழாலையைச் சேர்ந்த நாகரத்தினம் புனிதவதிக்கு 2 ஆயிரம் ரூபாவும், இதே இடத்தைச் சேர்ந்த சின்னன் வாமதேவனுக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக செலுத்துமாறுஉத்தரவிட்டார். (இ-5)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

புலோலிமேற்கு விநாயகர் தரும நிதியத்தின் நிறுவுநரும் சமய, சமூக சேவையாளருமான தேசாபிமானி அமரர் ஆ. சி. முருகுப்பிள்ளையின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. புலோலி மேற்கு ஸ்ரீ தெரணி அம்மன் ஆலய முன்றலில் காலை 8-30மணி தொடக்கம் தரும நிதியத்தின் செயலாளர் வ. ச. செல்வராசா தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பல சமய சமூக சேவையாளர்கள் கலந்து கொண்டு இரங்கலுரை ஆற்றுவார்கள். (இ-30)

## போக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

நோக்கியுள்ளனர்.

மல்லாவி ஆஸ்பத்திரியில் மட்டும் பத்துக்கும் அதிகமான நோயாளர்கள் வவுனியா செல்வதற்கு அம்புலன்ஸ் வாகனத்தை எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை நீடிக்குமானால் வன்னிப்பகுதியிலுள்ள அவசர நோயாளர்கள் மருத்துவ சிகிச்சையின்றி மரணமடையும் நிலை ஏற்படலாமென்று அஞ்சப்படுகிறது. (இ-5)

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

னத்துரை சக்திவேல்— யாழ்ப்பாணம்], ஸ்ரீ முகுந்தன் [தங்கராசா ராஜேந்திரன்— மட்டக்களப்பு], ரவிதேவன் [யோகராசா யோகேஸ்வரன் — மட்டக்களப்பு], ஸ்ரீதரன் [கந்தையா ஞானப்பிரகாசம் — மட்டக்களப்பு], தமிழேந்தி [வில்லியம் றொகான்— யாழ்ப்பாணம்]; மருதநந்தி [கிருஷ்ணமூர்த்தி மதனரூபன் — யாழ்ப்பாணம்] சுதன் (நாதன் சண்முகவரதன் — யாழ்ப்பாணம்], செழியன் [கிருஷ்ணபிள்ளை சத்தியநாதன் — யாழ்ப்பாணம்], ராஜன் [மதியலிங்கம் அன்புநாதன் — யாழ்ப்பாணம்), அகத்காவலன் [கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி— அம்பாறை], அகல்பன் [கோவிந்தராஜா கருணாகரன் — மட்டக்களப்பு], கனகசுந்தரம் அல்லது கனகராசா [வேலுப்பிள்ளை விமலேஸ்வரன்—மட்டக்களப்பு].

பண்டாரவன்னியன் (நடராசா ஆறுமுகசுவாமி — திருகோணமலை), கதிர்வீரவன் (கிருஷ்ணசாமி மாரியப்பன் —வவுனியா), ஐயன் (சூரியகாந்தி உதயசூரியன்—யாழ்ப்பாணம்), சொக்கன் (பூவண்ணன் சாந்தன் — மன்னார்), யாழ்.குயில் (பரராஜசிங்கம் மங்கையர்க்கரசி — யாழ்ப்பாணம்),

தேன்மொழி அல்லது டிலானி (தில்லைநாயகம் விருசாதிலகம் — யாழ்ப்பாணம்), கலைமகள் (இராமலிங்கம் கெங்கா — யாழ்ப்பாணம்), ரஜனி (கந்தையா மஞ்சுளாதேவி — யாழ்ப்பாணம்), சதா (செல்வராஜா விஜயமலர் — வவுனியா), செல்வந்தன் (முருகு அமுது — மன்னார்), இளங்கோவன் (சிவராசா விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம்).


# சதுரங்கச் சுற்றுப் போட்டி - 1999

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை

யாழ். பல்கலைக்கழக

**வெள்ளிவிழா ஆண்டையொட்டி**

**இலங்கை வங்கியின்**

அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள

சதுரங்கச் சுற்றுப் போட்டி

எதிர்வரும் 28-07-99 ஆரம்பமாகின்றது

மேற்படி சுற்றுப் போட்டி

- அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி — ஆண்கள் பிரிவு
- அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி — பெண்கள் பிரிவு
- தனி நபர்களுக்கிடையிலான சுற்றுப் போட்டி — ஆண்கள் பிரிவு
- தனி நபர்களுக்கிடையிலான சுற்றுப் போட்டி — பெண்கள் பிரிவு

ஆகிய பிரிவுகளை உள்ளடக்கி தாக அமையும். இச்சுற்றுப் போட்டி பற்றிய மேலதிக விவரங்களை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக் கொள்ளலாம்.

சகல சுற்றுப் போட்டிகளுக்குமான விண்ணப்பப் படிவங்களும் 07-07-99 முதல் யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி அலகினரால் விநியோகிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 21-07-99 இற்கு முன்னர் உடற்கல்வி அலகில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விளையாட்டு அவை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(சி/ 8081)



# I. B. S.

**கல்வி நிறுவனம்**

சுண்டுக்குளி.

- ☐ ஆண்டு 1 — O/L வரை
- ☐ தரம் 5 புலமைப் பரிசில்
- ☐ O/L கணிதம், விஞ்ஞானம், தமிழ்
- ☐ [illegible]

[illegible]


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361. ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-07 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org